Registered No. M. 878

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

**A Tamil Monthly Journal**

Devoted to Theosophy, Religion,

Science, Art and Civilization.

தொகுதி 7 } 1916-ம் ௵ ஜூன் ௴ நள ௵ வைகாசி ௴ { பகுதி 2

அ. ரங்கசாமி ஐயர், B.A.,B.L.,F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

## பொருளடக்கம்.
## (CONTENTS)


பக்கம்.

1. தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் 41
From the Editor—R. Rangaswamy Iyer.
2. சன்மார்க்கம்—ஒட்டநத்தம் ஜகவீரபாண்டியன் 52
Ways of the Good—Ottanatham Jagaveera Pandian.
3. அறஞ்செய விரும்பு—அசலாம்பிகையம்மாள் 54
Desire to do your Dharma—Achalambikai Ammal.
4. ரவீந்த்ரநாத் டாகோரின் சரித்ரம்—ராகவ ஐயர் 60
Life of Rabindranath Tagore—Raghava Iyer.
5. மீராபாய்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் 65
Meerabai—R. Sreenivasa Iyer.
6. பரோபகாரம்—ஆர். பஞ்சாபகேச ஐயர் 73
Service R. Panchapagesa Iyer.



**LOOK HERE! BEST PLEASE!**

# AVARAMBOO POWDER.

## A SUBSTITUTE FOR COFFEE.

Coffee drinking is one of the 'fashions' of the day This practice is increasing day by day in our Indian Society Though coffee acts as a stimulant, the fact that it is the cause of such deadly diseases as Diabetes, Biliousness, etc., must not be overlooked. Many medical authorities have treated this question seriously and many thoughtful men have now actually abandoned coffee drinking. Gentlemen! Our AVARAMBOO POWDER has effectually overcome these difficulties. It is cheap, healthy and simple It is prepared from pure indigenous vegetable matter. It has the flavour of cocoa, the taste of coffee, and the virtues of both without their vices. It is a powerful stimulant, cooling to the system, refreshing to the brain and there fore *a boon to the people.* The method of using is the same as that of coffee. A trial order solicited.

PRICE
Per Tin Rs. 0— 8—0
Inland post paid 0—12—0

N. B.—Agents wanted.
PREPARED BY V. A. R. SWAMI,
*Native Doctor,*

Venkatankuruchi, PARAMAKUDI.
25%commission to wholesale buyers & Agents.

# பூர்ணசந்திரோதயம்.

**A Tamil Monthly Journal**

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.

## ஆறாந் தொகுதி.

1915ளு மேமீ முதல் 1916ளு ஏப்ரில்மீ வரை
12 சஞ்சிகைகள் கொண்டது.

அ. ரங்கசாமி ஐயர், B.A.,B.L.,F.T.S, பத்திராதிபர்

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை.
விக்டோரியா அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

# ஆறுந்தொகுதி விஷய அகராதி.


| | பக்கம். |
|---|---|
| அன்பே முத்தி நிலை— வி. அருணாசலம் ... | 220 |
| ஆசாரம் அல்லது நன்னடக்கை.—வஸந்தானந்தன் ... | 305 |
| ஆசையை ஒழியுங்கள்— வி. விசுவநாதையர். பி. ஏ. பி. எல். | 18 |
| ஆயுளின் முக்யமான கருத்து— ஆர். பஞ்சாபகேசஐயர் | 168 |
| இந்துக்களின் தத்துவசாஸ்திரம்— ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் | 51 |
| இந்து ரஸாயன சாஸ்திரம்—ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் | 178 |
| உதயதிசை நக்ஷத்ரஸங்கம்— பி. எஸ். ராமசுப்பையர் ... | 173 |
| உதயதிசை நக்ஷத்ரசங்கத்தாருக்கு ஓர் விண்ணப்பம்— பி. எஸ். ராமசுப்பையர் ... | 249 |
| என்னிஜ அநுபவம்—ஓர் ஸ்வதேசாபிமானி ... | 145 |
| ஒரு சிறு விளக்கு—பி. குமாப்பசெட்டி ... | 264 |
| ஓர் கடிதம்—தக்ஷிணாமூர்த்திசாஸ்திரி (மேல் மங்கலம்) | 81 |
| ஓர் உபந்யாஸம்— ஆர். பஞ்சாபகேச ஐயர். ... | 259 |
| கடம்பூர் ஸ்வர்ணமணிமாலைச் சங்கத்து ரிப்போர்ட்டு — ஆர். பஞ்சாபகேசஐயர் | 265 |
| கல்விக்கைங்கரியம்—ஜே. கிருஷ்ணமூர்த்தி. ... | 310 |
| கீதாஞ்சலி—பி. குமரப்பசெட்டி ... | 273 |
| குப்தவித்யை—பி. எஸ். ராமசுப்பையர் ... | 67, 125 |
| கைங்கரியம்: வித்யாதர்ம பரிபாலனஸபை — ஆர். ரங்கஸ்வாமிஐயர் ... | 418 |
| சமாசாரம் | 27, 150, 194, 272, 356, 427, |
| சற்குரு சரணங்களில்—சார்லிதாஸன் | 329 |
| சிறுவர்க்குரிய விஷயம்—பி. எஸ். ராமசுப்பையர் | 29, 101, 134, 191, 305. 353, 393. |
| சுதேச ஊழியர்களின் சங்கம்—பி. எஸ். ராமசுப்பையர் | 85 |
| சூக்ஷ்மசரீரிகளான மஹோபகாரிகள்—பி. எஸ். ராமசுப்பையர் | 8 |

பக்கம்.

தற்கால நிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர் ... 1, 41, 57, 105, 153, 201, 241, 281, 321, 361; 401,

தியானக்ரமவிஷயம்—கே.யஸ். ராமசந்திர ஐயர் 33, 96, 137, ... 197, 233, 275, 313, 357, 398, 442,

திருக்குறளாராய்ச்சி—யம். சுப்பராம ஐயர் ... ... 377

தேவாபி மருகுருநாதரிரட்டை மணிமாலை—யம். வேத நாயக ஸ்வாமிகள் ... 120

நக்ஷத்ரதூதர்களின் சங்கம்—பி. எஸ். ராமசுப்பையர் ... 186

நட்பு எதார்த்தமும், போலியும்—பண்டித ம. கோபால கிருஷ்ண ஐயர் ... 248

பரமர்வரும் வழியிற் பிரயத்நங்கள்—ஆர். சேஷாசார்யர் 75

பத்திராசிரியர் பக்கம் ... 415

பிம்பாராதனே—ச. வெங்கடாசலம் ஐயர் ... 289

புத்தக வரவு. ... 148,196, ... 268, 438

பெற்ருேர்கட்கும் உபாத்யாயர் கட்கும் ஓர் விக்ஞாபனம்— பி. எஸ். ராமசுப்பையர் ... 346, 383

மஹாத்மாக்களின் தொழில்—லெட்பீடர் ... 161

மருகுரு தோத்திர சோடசகலாமாலை—யம். வேதநாயக ஸ்வாமிகள் ... 22

மதனபள்ளி— டி யம். மொகையதீன் ... 215

மீராபாய்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் ... 113, 208, 253, 297 336, 389, 421

மொழி பெயர்ப்பு:—

ஆசாரம் அல்லது நன்னடக்கை—(Stories for young Children C. H. C. Publication) 305

ஆயுளின் முக்கியமான கருத்து—(Reincarnation) 168

உதயதிசை நக்ஷத்ர ஸங்கம்-Order of the Star in the east 173

ஒரு சிறு விளக்கு—(Lotus Buds' Journal) 264

பக்கம்.

ஓர் உபந்யாஸம்—(A lecture by Annie Besant) ... 259

கல்விக்கைங்கர்யம்—(Education as Service by J Krishnamurti) ... 310

குப்தவித்யை—(Hidden Side of Things by C. W. Leadbeater) ... 67

சிறுவர்க்குரிய விஷயம்—(Stories for Young Children C. H. C. Publicational)—29, 101, 134, 191, 305, 353, 393

ஸூக்ஷ்மசரீரிகளான மஹோபகாரிகள்—Invisible Helper by C. W. Leadbeater ... 8

தியானக்கிரம விஷயம்—Meditations from At the Feet of the Master by J Krishnamurthi 33, 96, 137, 197, 233, 275, 313, 357, 398, 442

நக்ஷத்ர தூதர்களின் சங்கம்—(Servants of the Star)... 186

நட்பு யதார்த்தமும் போலியும்—(Friendship True and False) ... 248

பரமர் வரும் வழியிற் பிரயத்னங்கள்—(Till he come—Preparation) ... 75

மஹாத்மாக்களின் தொழில்—(The work of the Masters Inner Life) ... 161

லோககுருக்கள்—(World Teachers—A Star Pamphlet) 229

வாழ்விசைப்பா—(Longfellow's Psalm of Life) ... 184

ஜகத்குரு வரும் வரை—(Till He Come) ... 13

ஜகத்குரு ஸ்தோத்திரம்—(Star Invocation) ... 252

லோககுருக்கள்—பி எஸ் ராமசுப்பையர் ... 229

வாழ்விசைப்பா—பண்டித ம. கோபாலகிருஷ்ணையர் ... 184

ஜகத்குரு வரும்வரை—ஆர் சேஷாசார்யர் ... 12

ஜகத்குரு ஸ்தோத்ரம்—இ. வி. நாராயண ஐயர் ... 253

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 7 } 1916-ம் ௵ ஜூன் ௴ நள ௵ வைகாசி ௴ { பகுதி 2

## தற்கால நிலைமை.

நமது பிரஹ்மக்ஞான சபை அக்கிராசனாதிபதியவர்களின் நிரந்தரமான முயற்சியும், தளராத சுறுசுறுப்பும் எல்லோராலும் மெச்சத்தகுந்தன. வாலிபர்களாலும் முடியாத அசகாயச்செய்கைகளை செய்ய வல்லவராக விருப்பதற்கு காரணம் என்ன? தம்முடைய குருநாதனுடைய மாதிருபூமியும் தமக்கு அபிமான மாதிருபூமியுமான இந்தியா மேம்பாடடைய வேண்டுமென்ற அவா மிகுந்திருப்பதாலன்றோ இவர் அல்லும் பகலும் உழைத்து வருகிறார். அன்னவர் முயற்சியில் ஒரு சிறு பாகமாவது நம்மவர் ஒவ்வொருவரும் கொள்வோமாகில் அவர் படும்பாடு எவ்வளவு சீக்கிரம் சபலமாகும், நமது ஜன்மமும் கிருதார்த்தமாகும்.

***

நமது பிரசிடெண்டு நாளிது மே௴ ஆரம்பத்தில் டாக்காவில் சில உபந்யாசங்கள் செய்தார், 6௳ மதராஸ் திரு

ம்பி வந்தார், 8௳ மலையாளம் ஜில்லா மஹாஜன சபையில் அக்கிராசனம் வகிக்க பாலக்காட்டுக்கு வந்துசேர்ந்தார். 8, 9, 10௳கள் முழுமையும் அவ்விடம் பல உபந்யாசங்கள் நிகழ்ந்தன. அவ்விடம் மஹாஜன சபையின் துவக்கத்தில் செய்த அரியதோர் பிரசங்கத்தைத் தவிர 9௳ காலையில் ஸ்ரீகோகலே ஞாபகச் சபையில் "கோகலேயின் சரித்திரத்தைப்" பற்றியும், 10௳ காலையில் பிரஹ்மக்ஞான கான்பரன்ஸில் அக்கிராசனாதிபதியாக "பிரஹ்மக்ஞானத்தினால் மதங்களுக்கு பிரயோஜனம்" என்னும் விஷயத்தைப்பற்றியும் அரிய பிரசங்கங்கள் செய்தார். உடனே சென்னை போயங்கிருந்து 14௳ மத்தியானம் மதுரை வந்துசேர்ந்தார். அன்று மாலையில் "பிரஹ்மக்ஞானத்தினால் இந்தியாவுக்குப் பிரயோஜனம்" என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசினார். 16௳ காலையில் மாணாக்கர்களுக்கு புத்திமதி கூறினார். 18௳ காலையில் மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் பொதுஜன கைங்கர்யத்தைப் பற்றிப் பேசினார். இவைகள் தவிர மதுரையில் 15, 16, 17, 18௳களில் நடந்த சென்னை மாகாண கான்பரென்ஸ் முழுமையும் கூடவிருந்து செவ்வனே நடக்கும்படி செய்தார். அக்கான்பரென்சில் பல முக்கியமான விஷயங்களைப்பற்றி பேசினார். 17௳ சாயங்காலம் "நாம் பிரிட்டிஷ் ராஜாங்கத்திற்குள் ஸ்வாராஜ்யம் கோருவானேன்"? என்னும் அரிய விஷயத்தைப்பற்றி வெகு சாதுர்யமாயும் உருக்கமாயும் பேசினார். தவிர அன்று காலையில் ஆசார சீர்திருத்த கான்பரென்சில் "ஸ்திரீ வித்யை"யைப் பற்றி சில வார்த்தைகள் சொன்னார். இவ்வளவு சுறுசுறுப்பு நிறைந்த நாள்களுக்குப்பிறகு சென்னை சென்ற நமது பிரசிடெண்டு 21, 22௳ பம்பாய் ராஜதானியில் புனா நகரத்தில் சில உபந்யாசங்கள் செய்வதாய் ஏற்கனவே வாக்களித்ததை நிறைவேற்றுமாறு அவ்விடம் ஏகினார். 21௳ காலை மஹாராஷ்டிர தியசாபிகல் சொஸைடிகளின் கூட்டத்தில் "பிரஹ்மக்ஞானத்தின் பிரயோஜனத்தைப்" பற்றியும் ஸ்ரீ திலகர் அக்கிராசனத்தின்கீழ் 21௳ மாலையில் "இந்தியாவின்

வருங்கால ஸ்திதியைப்" பற்றியும் 22உ காலை "இந்தியா பிரிட்டிஷ்ராஜாங்கத்தின்கீழ் ஸ்வாராஜ்யத்தை ஏன் அபேக்ஷிக்கின்றது" என்னும் பெரும் விஷயத்தைப் பற்றியும் உபந்யசித்தார். 22உ மாலையில் லோககுருவின் அவதாரத்தைப்பற்றி உபந்யாசம் செய்வதாக உத்தேசித்திருந்ததில் பெரிய காற்றும் மழையும் திடீரென்று வந்துவிட்டதால் அது நடைபெறவில்லை. மேற்கண்டவிதம் அதிக சிரமம் எடுத்துக்கொண்டதாலும், மேமீ 20உ வாக்கில் அடித்த கொரோமான உஷ்ணக்காற்றின் வேகத்தாலும் நமது அம்மையாரவர்களுக்கு தொண்டை சரியாயில்லை. மதராஸ் வந்து சேர்ந்தார். பலத்ததோர் காயச்சலும் வந்து விட்டது. சரீரமென்ன செங்கலும் சுண்ணும்பும் வைத்துக் கட்டியதா? எவ்வளவு சிரமத்தைத் தான் பொறுக்கும். 103 டிக்கிரிக்கு மேல் காய்ச்சலடிக்க படுக்கையில் படுத்திருந்தார். அப்போது, 26உயன்று, பெரியதோர் விபத்து நேர்ந்தது!

***

நமது அன்னிபெஸண்டு அம்மையார் பத்திராதிபராய் நடத்திவரும் "நியூ இந்தியா" அதாவது "நவபாரதீ" யென்று பொருள்படும். ஆங்கில தினசரி பத்திரிகையானது 1914 வருஷம் துவக்கப்பட்டபோது சட்டப்படி ஒவ்வொரு பத்திராதிபரும் ஜாமீன் கட்டவேண்டுமென்று உத்திரவாவதற்கு விரோதமாக இந்த பத்திரிகைக்கு ஜாமீனன்றியே நடத்தி வரலாமென்று அநுமதி கொடுக்கப்பட்டது. அப்பத்திரிகையும், அதுமுதல் இதுகாறும் நம் நாட்டின் மேம்பாட்டை நாடி உழைத்துவந்தது சகலரும் அறிந்த விஷயம். இந்தியாவும் இங்கிலாந்தும் சேர்ந்து நீடூழிகாலம் ஒன்றிற்கொன்றுதரவாக வாழவேண்டுமென்பதும், இந்தியாவானது தற்காலத்திலிருக்கும் தாழ்ந்த ஸ்திதியைவிட்டு இங்கிலாந்து அதன் மக்கள் நாடுகளாகிய கனடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகள்போல ஸ்வாராஜ்யம் பெறுவதற்கு யோக்யதையை யடைந்துவிட்டது, அந்த

ஸ்வாராஜ்யத்தைகூடிய சீக்கிரத்தில், இந்த பிரகிருக யுத்தத்தின் அந்தத்தில், அடையவேண்டுமென்பதும், ஆனால், உத்தேசித்த காரியத்தையடைய எடுக்கும் முயற்சியானது எப்போதும் சட்டத்துக்குக்கீழ்ப்படிந்து பத்திரிகை வாயிலாகவும், மஹாநாடுகள் கூட்டுவதினாலும், ஜனங்களுடைய தீவிரமான ஆவலை வெளியிடுவது மூலமே செலுத்தப்படவேண்டுமென்பதும், இந்த நியூ இந்தியா பத்திரிகையின் முக்கியமான கொள்கைகள். அநேகர் இப்பத்திரிகையைப் படிப்பதினாலேயே தேசாபிமானமும் பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்கு உண்மையான ராஜவிசுவாசமு முடையவராய் நமது மாதிருபூமியும் பிரிட்டிஷ் ராஜாங்கமும் மேம்பாடடையும் வண்ணம் மிகவும் பரிந்து உழைத்து வருகிறார்கள். ஆகையால் நமது ராஜாங்கத்தார் உண்மையாகவே நியூ இந்தியா பால் நன்றி பாராட்டுதலே பொருத்தமாகும்.

***

அப்படியிருக்க சென்னை சீப் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டாரவர்கள் நியூ இந்தியா பத்திராதிபர் ஜாமீன் கொடுக்க வேண்டியதில்லையென்று, 914-ம்வருஷத்தில் செய்திருந்த உத்தரவை மாற்றி 2000ரூ ஜாமீன் கட்டும்படி நாளிது மேமீ 22உயன்று உத்தரவு அளித்ததை 26உயன்று மாதுஸ்ரீ பெஸண்டம்மாளிடம் ஒரு உத்யோகஸ்தன் கொண்டுவந்து கொடுத்தான். இத்த உத்தரவானது அநீதமானது என்று நமது பாரதவர்ஷம் முழுமையும் கதறுகின்றது என்றால் பொருந்தும். தீர்க்கமாயாலோசனை செய்து நமது மாட்சிமை பொருந்திய லார்டு பெண்ட்லண்டும், அவர் தம் ஆலோசனைசபையாரும், இந்தஉத்தரவை மாற்றி இந்தியாவுக்கு ஆறுதல் செய்வார்கள் என்று எண்ணுகிறோம். மேற்கண்ட உத்தரவிலோ ஏன் புதிதாக ஜாமீன் கேட்கப்படுகிறது என்று காரணமும் காட்டப்படவில்லை. ஆகையால், எந்த விஷயத்தில் தவறுதல் என்று அறிவதும் கூடாததாகின்றது.

நமது லேட் ராஜப்பிரதிநிதியாயிருந்த ஹார்டிங்பிரபு இங்கிலாந்துக்கு சௌக்கியமாய்ப் போய்ச் சேர்ந்தார் என்றும், அங்குபோய் நம்நாட்டை மறக்காமல் இந்தியர்களுக் கநுகூலமான சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமெனத் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார் என்றும், பத்திரிகை வாயிலாக அறியச் சந்தோஷப்படுகிறோம்.

***

மேமீ 14, 15, 16, 17, 18, 19, 20உ களில் இம்மதுரை மாநகரத்தில் மிகவும் கோலாகலமாக மாதிருபூமி கைங்கர்ய விழாவானது வெகுவிமரிசையாய் நடந்தேறியது. சென்னை மாகாண கான்பரென்ஸ், ஆசார சீர்திருத்த கான்பரென்ஸ், வர்ணாச்ரமதர்ம கான்பரென்ஸ், பிரஹ்மஞான மீட்டிங்குகள், தமிழ்ச் சங்கத்தின் வருஷோத்ஸவம், வித்யா விஷய பரிசீலனை கான்பரென்ஸ் என்ற பெரிய கூட்டங்கள் கூடின. நாமங்களும் ரூபங்களும் பற்பலவாயினும் உண்மையில் அவையாவும் நம் நாட்டின் க்ஷேமத்தை நோக்கமாய் கொண்டே கூடின. நமது சென்னை மாகாணத்தின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் அந்தந்த பாகங்களின் முக்கியஸ்தர்களனைவரும் ஒருங்கே வந்திருந்ததால் கூடிய பற்பல சங்கங்களும் மிகவும் சிறப்புற்றோங்கின. அவர்களை வரவேற்கவென இவ்விடத்திய வரவேற்கும் "சபையாரா"லும் காரியதரிசிகளாலும் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் விருந்தினரின் சௌகரியத்துக்கு போதுமானவையாயிருந்தன. விருந்தினர்களும் மதுரை, ராமனாதபுரம் ஜில்லாக்காரர்களும் பரஸ்பரம் தெரிந்துகொள்ளவும் சினேகத்துக்கு பாத்திரமாவதற்கும், தகுதியான தருணமாயிற்று. விருந்தினர்களுக்கு உபசாரம் செய்ய ஆயத்தர்களாக உள்ளூராரும், குற்றம் குறையிருந்தாலும் அவற்றை பாராட்டாது குணத்தை கிரகிக்க ஆவலுள்ளவர்களாக விருந்தினர்களும் இருந்ததால் எல்லோருக்கும் சந்தோஷகரமாகவே அந்தகாலமுழுமையும் செலவழிந்தது. அச்சந்தோஷத்துடன் ஒவ்வொரு

வரும் திரும்பிப்போகும்போது அதிகமான ஞானமும், தேசாபிமானமும், சிரத்தையும், மாதிருபூமி கைங்கர்யம் செய்யவேண்டும் என ஊக்கமும் கொண்டுபோனார்கள்.

***

கனம் பி. கேசவ பிள்ளையவர்கள் சென்னை மாகாண கான்பரென்ஸ் அக்கிராசனபதி. விடாமுயற்சியுடன் வெகு கார்யங்களை சாதித்து முடித்தவர். முன் சர்க்கார் உத்தியோகஸ்தர்களால் இவரது சிற்சில அபிப்பிராயங்களுக்காக இகழப்பட்டு பரிகாசம் செய்யப்பட்டாலும் தன்னுடைய உழைப்பினாலும் பிடிவாதத்தாலும் தன்னுடைய கக்ஷியை ஒத்துக்கொள்ளும்படி சர்க்கார் உயர்தர உத்தியோகஸ்தர்களை வசப்படுத்தியவர். இவரது விடாமுயற்சியால் காடுகள் சம்பந்தமாயும் சிறைச்சாலைகள் சம்பந்தமாயும் முக்கியமான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. இவர் பி.ஏ. முதலிய உயர்தரப் படிப்பு இல்லாதவராயிருந்தும், முன்சீபு கோர்ட்டு வக்கீல் ஸ்திதியை மட்டுமடைந்திருந்தும், தன்னுடைய மனோ வலிமையால் இத்தகைய புகழும் கீர்த்தியும் அடைந்தது மனமிருந்தால் சகல கார்யங்களையும நிர்வஹிக்கலாம் என்று உலகத்தாருக்கு நிரூபித்துக்காட்டுகிறது. இவரது உபந்யாசமானது நமது தேசம் ராஜரீக விஷயத்தில் அடையவேண்டிய சீர்திருத்தங்கள் இன்னவை என்று விளக்கி காட்டியது.

***

அந்த மாகாண கான்பரென்ஸுக்கு வரவேற்கும் சபைக்கு அக்கிராசனபதியாக ராமனாதபுரம் ராஜா சேதுபதியவர்கள் அமர்ந்து வரவேற்று இனியதோர் உபந்யாசம் செய்தார். வயதில் சிறியவராயினும் தன்னுடைய ஸ்திதிக்கும்பதவிக்கும் ஏற்றநற்புத்தியும் நன்முயற்சியும், மேலான அபிப்பிராயங்களும் கொண்டவர். அவர் உபந்யாசமும் தற்காலத்து இந்தியர்களால் முக்கியமெனக் கொள்ளப்படுகிற ஒவ்வொரு முக்கிய விஷயங்களையும் நன்கு ஆராய்ந்து

கொண்ட அபிப்பிராயங்களால் நிறைந்து நின்றது. தேசத்துக்குப் பாடுபட இத்தகைய பிரபுக்களும் ஜமீன்தார்களும் முன் வந்திருப்பது நம் நாட்டின் மேம்பாட்டுக்கு அரிய சூசகமாகும்.

***

14௳ நடந்த உபந்யாசத்தில் மாதுஸ்ரீ பெஸண்டம்மையார் அடியில்கண்டபடி கூறினர். ஸ்ரீ கிருஷ்ண பகவான் லோகஸங்க்ரஹத்தை அதாவது லோகத்துக்கு ஹிதத்தை செய்வதே மோக்ஷத்துக்குரிய சாதனம் என்று சொல்லியுள்ளார். ஆனல் இந்தியாவிலோ சாதாரணமாக முமுக்ஷு-வென்று சொல்லிக்கொண்டு வேதாந்தம் பயில்வோன் லோகோபகாரத்தில் அவ்வளவு சிரத்தையுடையவனுக விருக்கிறதில்லை. தியாசபி என்ற பிரஹ்மஞானமானது ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய மேற்கூறிய தாத்பரியத்தை வற்புறுத்துகிறது. மேலும் முத்தியடைதல் என்றால் தேசாந்தரத்துக்குப் போவதில்லை. இருந்த இடத்திலேயே நின்று ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களினின்றும் வேறாகியும் அந்த சரீரங்களை இயக்குகின்றவருமாகிய ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்று என்று அறிந்து நான் எனது என்ற பந்தங்களிலிருந்து விடுபடுவதுதான். ஆகையால் தன் நயத்தைக் கருதாமல் சகல ஜனங்களுக்கும் ஊழியம் செய்வதே, எல்லோரிடத்தும் அந்தர்யாமியாயிருக்கும் பரமாத்மாவை பூஜிப்பது. மேற்கண்டதத்வங்கள் ஹிந்துமதத்தில் இன்னும் மறக்கப்படவில்லை. மேனாட்டு கிருஸ்தவ மதத்திலோ பற்பல முக்கியதத்வங்கள் அநேகமாய் மறந்துபோய்விட்டன. தியாசபி என்பது புதுமதமல்ல, எல்லா மதங்களிலும் எல்லா உண்மைகளும் இருக்கின்றன. ஆனல் அவைகளில் ஒரு உண்மை ஒரு மதத்திலும், மற்றொன்று மற்றொன்றிலும் கால தேச வர்த்தமானங்களுக் கிணங்க வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. ஆகையால் மதங்களின் ஐகமத்யத்தை எல்லோரும் அறியற்பாலது. மதத்திலிருந்து மதாந்தரப்பிரவேசம்

கிரார்த்தகமானது. மேலும் தியாசபியானது, முன் சரியாக கிரகிக்கப்பட்டு பிற்பாடு காலக்கிரமத்தில், பிசகாக உபயோகிக்கப்பட்ட கொள்கைகளை இக்காலத்துக்கேற்ப விளக்கிக் காட்டுகிறது. "எனது தலைவிதி" யென்று சொல்லி முயற்சிக்கே இடையூறாக நம்மவர் கர்மத்தைத் தவறுதலாகக் கொள்கின்றனர். ஆனால் கர்மம் என்றால் என்ன? முன் நாம் செய்த காரியத்துக்கு பலன் தற்போது நிகழுமாயினும் அது நமது மனோசக்தியையும் நன்முயற்சியையும் தடுக்கவில்லை. ஆகையால் முயற்சி செய்வதவசியம் என்று "கர்ம"த்தின் சரியான அர்த்தத்தை விளக்கிக்காட்டுகிறது.

***

மேமீ 16உ காலையில் திருவாங்கூர் சமஸ்தானம் பெரிய திவான் பேஷ்கார் என். சுப்பிரமணியஐயரவர்கள் வர்ணாசிரம தர்ம கான்பரென்ஸுக்கு அக்கிராசனபதியாயமர்ந்து மிக்க ஆழ்ந்த யோசனையுள்ளதும், மேனாட்டு ஜன சமூகசாஸ்திரத்தின் ஆராய்ச்சியோடு கூடியதுமான உபந்யாசம் செய்தார். வர்ணம், ஆசிரமம் என்ற இரண்டு ஏற்பாடுகள் தான் ஹிந்து மதத்துக்கு முதன்மையான கொள்கைகளென்றும், நம் நாட்டிலுள்ள நான்கு வர்ண பேதம்போல் மற்ற நாடுகளிலும் இந்த ஏற்பாட்டை அப்பசித்தால் லோகக்ஷேமம் கைகூடுமென்றும், வர்ணபேதமுள்ளவர்கள் ஒருவருக்கொருவர் சாப்பாடு, கொள்வினை கொடுத்தல் வைத்துக்கொள்வது சிலாக்கியமில்லையென்றும், நம் நாட்டைவிட்டு புறநாடு செல்வது சரியல்லவென்றும், ஆகையால் சாதாரணமாய் சமுத்திரயானம் தடுக்கப்படுகிறது என்றும், ஸ்திரீகளுக்கு ருதுமதீ விவாஹம் யுக்தமல்லவென்றும், ப்ரௌடையாவதற்கு முந்தி கல்யாணம் செய்வது தான் ஸ்திரீகளுடைய சுத்தத்துக்கும் கற்புக்கும் மரியாதைக்கும் ஏற்றது என்றும் எடுத்து காட்டினார். மறுநாள் அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன. (1) வர்ணாசிரம தர்மத்தை

முன்போல உயர்ந்த ஸ்திதிக்கு கொண்டுவருதல் அவசியம். அதினாலேயே அமரிக்கை, சந்துஷ்டி, ஐசுவரியம் இவை கூடும் (2) தேவஸ்தானம், சத்திரம் முதலிய தர்மங்கள் இவைகளின் நிர்வாக சபைகளில் வைதிக அபிப்பிராயங்கள் கொண்டவர்களுக் கென்று இடம் கொடுக்கவேண்டும் (3) வர்ணாசிரம தர்மத்தை பிரகடனம் செய்தலவசியம் (4) கல்யாணம் முதலிய ஜனங்களுடைய மத ஆசார விஷயங் களில் சட்ட நிருபணங்கள் செய்வது நியாயமில்லை (5) சக போஜனமின்மையும் பெண் கொடுத்து வாங்கலில்லாமலி ருப்பதும் தேசத்தின் ஒற்றுமைக்கு இடையூறல்ல (6) வரு ஷந்தோறும் இதர கான்பரென்ஸுகளுடன் வர்ணாசிரம தர்ம கான்பரென்சும் கூடவேண்டும் (7) வர்ணாசிரம தர்ம கார்யங்களை நடத்த ஒரு சம்பளமுள்ள உத்தியோகஸ்தர் நியமிக்கவேண்டும்.

***

மேமீ 17உ காலையில் மாகாண ஆசார சீர்திருத்த கான்பரென்ஸுக்கு மதுரை ஹைகோர்ட்டு வக்கீல் வி. ராமச்சந்திர ஐயரவர்கள் வரவேற்கும் சபை நாயகராய் நல் வரவுகூற, கனம் அட்வொகேட் ஜெனரல் எஸ். ஸ்ரீனிவாச ஐயங்காரவர்கள் அக்கிராசனபதியாய் அமர்ந்தார்கள். சமுத் திரயானம் சாதாரண வழக்கத்துக்கு வந்துவிட்டது. வர் ணாந்தர சஹபோஜனமும் பற்பல தடவை நடந்தும் அதற் காக ஜாதிபிரஷ்டம் செய்யவில்லை. ஒருவரும் பிராயச்சித் தம் செய்யவும் காணோம். இன்னும் பலமார்க்கங்களில் நாம் முன்னுக்கு வருகிறோம். நான்கு வர்ணத்தாரும் அவ ரவர்களுக் கேற்பட்ட கடமைகளையும் செய்து கௌரவத் தை அடைந்தால் சரிதான். ஆனால் கடமையில்லாமல் மரி யாதை மட்டும் வேண்டுதல் அடாது. மேலும் வர்ணாந்தரங் களுக்குள் மூராணும் ஏற்பட்டு விட்டது. ஆகையால் முன் போல் வர்ணாசிரமம் இருத்தல் முடியாது. வர்ணபேதம ஒழிவதே நாட்டின் ஐக்கியத்துக்கு ஏது. ருதுமதீவிவாஹத் தால் பெண்டுகள் கற்பழியும் என்று சொல்வதைப்போல

நம் நாட்டு ஸ்திரீகளுக்கு அகௌரவமான அபவாதம் வேறொன்றுமில்லை. வர்ணாசிரம தர்ம கான்பரென்சுகள் இப்போது நடப்பதைப்பற்றி பயப்பட யாதொரு காரணமும் இல்லையென்று தன் அபிப்பிராயத்தைக் கூறினர். ஸ்திரீகளுக்கு கல்வி விருத்தியடைய வேண்டுமென்ற விஷயத்தைப்பற்றி பஞ்சாப் மாகாணத்தில் ஜனித்தவருமான டாக்டர் மேஜர் கணபதிராயின் மனைவியார் ஒரு அழகிய பத்திரம் வாசித்தார். அதன்பிறகு தமிழில் கோயமுத்தூர் வியவசாயக்கல்லூரி உபாத்தியாயர் ராமசாமி சிவனாரின் மனைவியார் ஒரு வியாசம்படித்தார். அதே விஷயத்தைப் பற்றி மாது ஸ்ரீ பெஸண்டு அம்மாள் இந்துக்களே இந்து ஸ்திரீகளின் கலாசாலைகளின் நிர்வாஹத்தை கைக்கொள்ளல் வேண்டும். அப்போது தான் புராதன இந்துஸ்திரீ ரத்தனங்களைப்போல இக்காலத்தும் உத்தம ஸ்திரீகள் விளங்குவார்கள் என்று விளக்கி காட்டினர்.

***

கீழ்ஜாதியாரை உயர்த்தலைப்பற்றி ஒரு தீர்மானமும், விதவைகள் விவாஹம்செய்ய தடைசெய்யாதிருத்தல், அதற்கு இருக்கும் நிர்ப்பந்தங்களைத்தவிர்த்தல், பூனாவில்போல் விதவாச்ரமங்கள் ஏற்படுத்தல் முதலிய விஷயங்களைப் பற்றி ஒரு தீர்மானமும், இப்போது நடைபெறும் வர்ணபேதமான்து போகவேண்டுமென்று ஒரு தீர்மானமும், ஸ்திரீ புமான்களுக்கு இப்போது கல்யாணம் செய்யும் காலத்தைவிட அதிகமான வயதுக்கப்புறம் விவாஹம் செய்யவேண்டும், ப்ரௌடையான பிறகு விவாஹம் செய்தல்தான் சரி, கன்யாசுல்கம், வரசுல்கம் வாங்குதல் பிசகு என்று ஒரு தீர்மானமும் செய்யப்பட்டன. கடைசியில் அநாதைகளான மைனர் பெண் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக அநாதாலயங்கள் ஏற்படுத்த ஒரு தீர்மானமும் கொள்ளலாயிற்று.

***

மேற்கூறிய இரண்டு கான்பரென்ஸுகளும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றனவென்று தோன்றுகின்றது,

ஜனங்களின் மனதைக்கலக்கி ஆழ்ந்த யோசனைகளையும் தீவ்ரமான எண்ணங்களையும் உண்டுபண்ணும் பல விஷயங்களைப்பற்றி வர்ணாசிரம கான்பரென்சில் யாதொரு தீர்மானமும் கொள்ளவில்லை. மேலும் தற்காலத்தில் நடைபெறுகிற வழக்கங்கள் சரிதான் அவைகளை மாற்றக்கூடாது என்று சொல்வதால் யாது கைகூடுமோ தெரியவில்லை. அல்லது பழய ஆசாரங்களை முன்போலக் கொள்ளல் முடியுமோவென்றும் ஐயம் ஏற்படுகின்றது. தற்காலத்தில் நம்முடைய ஆசாரங்களில் பெரியோருக்கு யுக்தமாய்த் தோன்றுகிற சீர்திருத்தங்களைச் செய்ய முயலாமல் பயப்படுவது ஆஸ்திரிச்சு என்ற கோழி தன் தலையை மணலுக்குள்ளிட்டுக்கொண்டு வேடனைத் தப்ப எண்ணுவது போலாகும். "பழயன கழிதலும், புதியன புகுதலும் வழுவல காலவகையினானே."

***

மாதங்களில் சிறந்து மிக்க புண்யம் பெற்றது மே மாதம் போலும். ஏனெனில் அடியில் குறிப்பிட்ட பற்பல கான்பரென்சுகள் கூடின.

6வ யில் பெங்களூரில் கன்னட ஸாஹித்ப பரிஷத்.

8வயில் கரூரில் திருச்சினாபள்ளி ஜில்லா கான்பரென்ஸ்.
பாலக்காட்டில் மலையாள ஜில்லா கான்பரென்ஸ்.
„ தியசாபிகல் கான்பரென்ஸ்.
காக்கினாடாவில் ஆந்திர கான்பரென்ஸ்.
„ ஆந்திர ஸ்திரீகள் கான்பரென்ஸ்.

9வயில் கரூரில் கிருச்சிஆசார சீர்திருத்தகான்பரென்ஸ்.

13வயில் காக்கினாடாவில் ஹிந்துமத கான்பரென்ஸ்.

15, 16வகளில் சங்கணசேரியில் திருவாங்கூர்நாயர் கான்பரென்ஸ்.

15, 16, 17, 18, 19, 20 மதுரை கான்பரன்ஸுகள்.

22, 23வகளில் திருப்பூரில் கோயமுத்தூர் ஜில்லா கான்பரென்ஸ்.
ஆசார சீர்திருத்த கான்பரென்ஸ்
ப்ரஹ்மக்ஞான கான்பரென்ஸ்
கைத்தொழில் கான்பரென்ஸ்

24வ தெனாலியில் குண்டூர் ஜில்லா கான்பரென்ஸ்.

27வ கோலாரில் கர்னாடக தியசாபிகல் பெடரேஷன்.

28வ திருநெல்வேலியில் மகம்மதிய கான்பரென்ஸ்.

ஆர். ரங்கஸ்வாமி ஐயர்.

## சன்மார்க்கம்.

உலகத்தின் கட்டோன்றி விளங்கும் எல்லா வுயிர்களும் துக்கத்தி னீக்கத்தையும் சுகத்தின் ஆக்கத்தையுமே யவாவி நிற்கின்றனவென்ப தனுபவசித்தமாம். ஜீவவர்க்கம் விருக்ஷவர்க்சம் தாதுவர்க்கம் என்ற மூவகையாக இந்நிலவுலகத்துப் பொருள்களெல்லாம் பிரிக்கப் பட்டிருக்கின்றன.

இம்மூவகை வர்க்கத்தினும் சிறந்து நிற்பது ஜீவ வர்க்கமே. இவ்வர்க்கத்திலோ எண்ணில்லாதபல பிரிவுகளிருக்கின்றன. இங்ஙனம் பரந்து விரிந்துள்ள இப்பிரிவுகள் பலவற்றுள்ளும் அரும் பெறல் மக்கள் யாக்கையைப் பெற்ற மனிதத் தொகுதியே மிகச் சிறப்புடையதாக மதிக்கப்படுகின்றது. இத்தொகுதி கட்கித்தகைய பெருஞ்சிறப் பெய்தியதற்குக் காரணம் மன நலமும் மதிமாண்பும் வாய்ந்திருக்கின்றமையேயாம். மனத்தையும் மதியையுந் தகுதியான வழிகளிற் செலுத்தல் வேண்டும். மனம் வாக்குக் காயங்களைப் பயனில்லனவும் பழி பாவங்கட்கேதுவாவனவுமாய் தீயவழிகளிற் செலுத்தாமல், பயனுள்ளனவும் புகழ் அறங்கட்கேதுவாவனவுமாய நல்ல வழிகளிற் செலுத்துதலே நன்மக்கட்குரிய பண்பாம். பண்பட்ட மனவடக்கமும், பொறுமையும் பரோபகாரமும் நற்பழக்கமுமே நமது வாழ்நாளில் நமக்கு மிகுதியும் பயன்றரத்தக்கது. மன நலமே மனிதனை மனிதனாக்குவது. நாம் ஒவ்வொருவரும் உலகத்திலே நிகழுகின்ற பலவகையான சகல சம்பவங்களையும் அனுபவரூபப்படுத்தி யவ்வநுபவத்தையும் அறிவையும் பொருத்துவதில் நின்றும் எழுகின்ற செயல்களையே செய்தல் வேண்டும். இச்செயல்களே தனக்கும் பிறர்க்கும் பெரும் பயன் பயக்கும். ஏனெனில் நமது எல்லாவறிவுகளும் அநுபவத்திலே தான் தங்கியிருக்கின்றன. நாம் எதை நமக்குவேண்டுமென்று விரும்புகின்றோமோ அதைப்பிறருக்குஞ்செய்தல் வேண்டும். பிறர் கூறுகின்ற இன்சொற்களும் இனியசெயல்களும் நமக்கு இன்பபயத்தலை நாம அநுபவித்தறிகின்றோம். அங்ஙனமே நமது சொற்களும செயல்களும் இனியனவாய்ப் பிறர்மாட்டுப் பேரின்பம் பயந்து நிற்குமாறு புரிந்து நிற்றல் வேண்டும். கடுஞ்சொற்களும் கடுஞ்செயல்களும் யாண்டும் என்றும் யாவர்க்கும் துன்பமே பயக்குமென்றுணர்ந்து, தன்னைப்போலவே பிறவுயிர்களையும் நோக்குதல் சன்மார்க்கத்தின் தன்மையாம். பசி, பிணி, கொலை, யச்சமுதலியவற்றால் பிறவுயிர்கள் வருந்துவதைக்கண்டால் உடனே உளம்பதைத்து அவை தம்முயிர்க்கு வந்தனவாகக்கருதியவ்வருத்தத்தில் நின்றும் அவற்றை நீக்கி யினைபுறச்செய்யார் பெறுதற்கரிய மனிதப் பிறப்பைப் பெற்றிருப்பினும், பிறப்பின் பயனெய்தாப் பேதையர்கள் என்று அறிஞர்க

ளால் எண்ணப்படுவார். ஆனந்தத்தையே யவாவி நிற்கும் உயிர்கள் அஃதெய்துதற்குரிய காரணத்தையுணரும் வரை எய்துதலரிதாம். பிறர்க்குத்துன்பஞ்செய்கின்றவன் எவனோ அவன் தனக்கே துன்பஞ் செய்துகொள்ளுகின்றான். பிறர்க்குஇன்பஞ்செய்கின்றவன் எவனோ அவன் தனக்கே யின்பஞ்செய்துகொள்ளுகின்றான். "எவ்வுயிருமென்னுயிர் போல் எண்ணியிரங்கவும் நின்றெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே" என்று சிவாநுபவச் செல்வராகிய ஸ்ரீதாயுமான ஸ்வாமிகளுடைய தண்ணமுதம் போன்ற வுண்மைத் திருவாக்கையுள்ளத் தமைத்து எல்லாவுயிர் களும்பயன்கருதாது இயன்றவரையுதவிபுரிந்து வருகின்றவர்களே பிறப்பின் பயன் பெற்ற பெருந்தகையாளர்கள் என்று நன்கு மதிக்கப் பெறுவார்கள். இவ்வருட்குணமே யோகத்தின் பயனாயுள்ளது. உயிர்க்குற்றதுணையாய் நின்று இருமையினும் இன்பமுதவிமுத்திப் பேற்றையுந் தப்பா தருளுந் தன்மையுடைய திவ்வருட் குணமே யென்பதை

"தன்னுயிர் தான்பரிந் தோம்புமாறு போல்
மன்னுயிர் வைகலு மோம்பிவாழு மேல்
இன்னுயிர்க் கிறைவனு யின்பமூாத்தி யாய்ப்
பொன்னுயி ராய்ப் பிறந் துய்ந்து போகுமே"

என்று எழுந்த சீவகசிந்தாமணியானும் உணர்த லமையும். "அலலலருளாள் வார்க்கில்லை" யென்பது பொய்யா மொழியாதலால், அருளுடையான் என்றும், இன்பமே துய்க்கும் இயல்பினனுவன். அருளுடையானிடமே யறங்களெல்லாம் விரைந்து வந்தடைகின்றன. கருணைப் பண்புடையவர்களே கருணாநிதியாகிய கடவுளையணுகிக் களித்திருக்கின்றார்கள். இவர்களுடைய செயல்களெல் லாம் இறைவன் செயலாகவே மதிக்கப்படுகின்றன. இத்தகைய சற்குணமுடையவர்களே சாதுக்கள் என்றழைக்கப் படுகிறார்கள். சன்மார்க்கர்களுடைய மேதாவிலாசமானது மழைத்தாரையைப்போல் நிர்மலமாகவும் வற்றாததாகவும் இவ்வுலகம் பெரும் பயன்பெறும்படிநிலைத்து நிற்கின்றது. இவர்களில்லையானால் இவ்வுலகம் நாம் வசிக்குந்தரமன்று. இவர்களுடைய பிரகாசத்தால் தான் நாம் ஒவ்வொருவரும் ஒழுக்கப் பேற்றைக் கருதியடைந்து உன்னத நிலையையெய்திவருகிறோம். சற்குணமுடைய வொருவனையே யுலகம் உற்றதுணையாக மதிக்கின்றது. சத்தியமும் சாந்தமும் ஆழ்ந்தகருத்தும் ஆற்றலும் வாய்ந்துள்ள வுயர்குணமனிதன ஒருவனே யிவ்வுலகைத்தன் வசப்படுத்துவான். பகுப்புணர்ச்சியைப் பெற்றுள்ள நாம்நல்லனசெய்து அல்லனவகற்றி வருவோமாயின் இன்பநிலையை விரைவிலடைவோம்.

**ஒட்டநத்தம் ஜகவீரபாண்டியன்.**

# அறஞ்செயவிரும்பு

மூதறிவிற் சிறந்த சோதரர்களே!

நமது பண்டைக்காலப் பனுவலாட்டியாராகிய ஔவையார் நந்தமிழ் தேசத்திற்கு உலக முற்றவும் இலகியொளிர்வதாய் மாந்தருள்ளளவும் மறக்க முடியாததாய், சொற்பொருள் உள்ளளவும் நற்பயன்றருவதாய் என்னிலத்தவற்கும் பன்னலமளிப்பதாய் மனமுவந் தியற்றியருளியதும், பிரதம வகுப்புப் பாடமாக இறந்த காலத்திலும், நிகழ் காலத்திலும், எதிர்காலத்திலும்பயிற்று விக்கப்படுவதும், ஆகிய சிறு தொடர் நீதிவாக்கியங்கள் பலவுளவென்பது வெளிப்படை. அவற்றுள்ளும் முந்தி நிற்கும் பெருமை வாய்ந்தது, ஆத்திச்சூடியெனும் நீதிக்கோவையே. அவ்வாத்திச்சூடியினும், முதற்கண் இந்து சாஸ்திர நீதிகளனைத்திற்கும் அஸ்திவாரம் போன்ற தொன்றை வடித்தெடுத்தொப்ப வைத்தமைத்த தொடர்மொழி நாம் மேலே கூறிய, "அறஞ்செயவிரும்பு" என்னும் ஒப்பிலாத் தொடரேயாம்.

என்னை, நமது ஔவையார் பிறநீதிகளிலொன்றை முதற்கண் கூறாமல் இவ்வறத்தினையே வியந்து கூறினார், என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

அறம் என்னும் ஒருமொழி தருமம் என்னும் ஒரு செம்பொருளையும், நீதியென்னும் மற்றொரு நுண்பொருளையும் பயக்கின்றது. அத்தருமமென்னும் ஓர் பொதுமொழி பல கிளைகளையுடையதோர் பெருந்தருவின் பராரைபோன்றதொன்றும், மற்று நீதியென்னும் சொல்லும் தன்னுள் பல கிளைகளையுடையதாய் மேற்கூறிய பராரையைத் தழுவியாங்கு இணைந்து நிற்பதாகும். இவ்விரண்டு பிரிவுகட்கும் ஆதாரமாய் பின்னப்படாததாய், அசைவற நிற்கும் பொதுமொழி அறம் என்பதேயாகும். முன் கூறிய தருமம் 32 பிரிவுகளுடையதென வகுக்கப்பட்டுளதெனினும், அவையன்றி அதன் உட்பிரிவுகள் காலபேதத்திற் கேற்றபடி

கணக்கற்றனவுமாகும். இவைகளையே மேலே நாம் பல கிளைகளெனக் கூறியதும், நீதியினும் மதிப்பிட முடியாத பல பிரிவுகள் உண்டென்பதை எவருமுணர்வார். இத்தகைய நல்லறம் அநாதிக் காலந்தொட்டு நாகரிகம் பெற்றிருந்த எந்த மதத்தவர்களிடத்தும் தேசத்தவர்களிடத்தும் அமைந்து அவர்களைத் தனதாணைக்குட்படுத்தி அரசு செலுத்தி வந்திருப்பதென்பது. பௌத்தர்களின்கொள்கையினாலேயே நன்கு புலனாகின்றது. இன்னும் பௌத்தஸ்திரீகள் கூடைகளில் தமது இயல்பிற்கு தக்கவாறு அரிசியையும் இதர ஆகாரத்திற்குபயோகமான வஸ்துக்களையும் நிரப்பிக்கொண்டு தெருத்தெருவாய்ச் சென்று பரபரப்பாய் இருபுறமும் நிற்கும் ஏழை, யெளியவர், நோயாளிகட்குப் பகிர்ந்தளிப்பதைத் தத்தம் தவறாக் கடமையாகக் கொண்டுள்ளார் என்கிற உண்மை இன்றும் நாளையும், அம்மதத்தினர் மிகுதியாய் வாழும் பர்மா முதலிய பிரதேசங்களில் பிரத்தியக்ஷமாய்க் காணலாம். நமது இந்திய மூதாதைகளும் இத்தகைய அறத்தினைச் சொல்லி லமைத்த ஔவையாரைப் போலத் தாம் வாழும் இல்லிலமைத்து நிலைபெறுக்கித் தம் வழியினர்க்கும் அப்புண்ணிய பலன் சித்திக்குமாறு செய்துள்ளார். அஃது யாதெனில், வழிப்போக்கர்கட்கும், மெலிந்தோர், முதியோர், ஆதியோர்க்கும் இளைப்பாற உதவும்படி வீட்டின் முகப்பில் அமைக்கப்படும் திண்ணைகளே. இவ்விதத் திண்ணைகளை இந்தியரைத் தவிர வேறெந்த தேசத்தினரது வீடுகளிலும் காண்பதரிது. இதுவும் நம் முன்னோர் அறத்தைப் பிரதானமாக நன்கு மதித்தொழுகி வந்ததற்குத் தக்கவோர் சான்றாம்.

அன்றியும் இறந்தோரை நினைந்து, செய்யும் பிதுர்ப் பிரீதியாகிய கிருத்தியங்களில் அப்பிதுர்க்களுக்கு அங்கீகாரமாகுகவென்றிடும் பிண்டத்தினை (அன்னவுருண்டை) எண்ணமுடியாத உயிர்ப் பிராணிகள் உலகிலிருக்கவும், (மருந்தேயாயினும் விருந்தோடுண்) என்னும் மூதுரைக்கிலக்காகத் தன் பசி எத்துணை மிகுதியாயிருப்பினும் தன்னினத்து பக்ஷிகளைக் கூவிக்கூவி யழைத்து அவைகளு

டன் மகிழ்ந்தொக்கவுண்டு களிக்கும் உயர்குணம் வாய்ந்த காக்கைக்கே அளிப்பதென்னும் பழமையான வழக்கமும் இவ்வறத்தையே சிறப்பித்ததென்னலாம்.

தவிர நமது தேவாலய உற்சவாதிகளில் சூரியமண்டலம், சந்திரமண்டலம், புத்தி தத்துவம், ஞானநிலே, அஞ்ஞான நாசம், மனேவசியம், ஆதாரபேதம், ஐக்கியம் ஆகிய பல தத்துவார்த்தங்களைக் குறிக்கும் சூரிய பிரபை சந்திர பிரபை, நாகவாகனம், ஹம்ஸவாகனம், சிம்மவாஹனம், குதிரை வாகனம், ரதம் முதலிய பல வாகன ஆரோகணக் காட்சிகளில் வேதங்களில் தர்ம ஸ்வரூபமாக கூறப்படும் ரிஷபவாகனக் காட்சியும், கெருடவாஹனக் காட்சியும் எவற்றிலும் மேலானதாகப் பாராட்டப் படுகின்றது. இதுவும் அவ்வறமே அனைத்திற்கும், ஆதாரமென்பதை அறிவுறுத்துமன்றே.

மனிதனுக்கிருக்கவேண்டிய உத்தம உயர்குணங்கள் அனைத்திலும் இத்தரும குணமே முதன்மையானதாய், இத்தகைய அறம், அல்லது தருமகுணம் தயை என்னும் வித்துக்குச் சமானமாகிய இயல்புக் குணத்தினின்றே அங்குரிக்கக் கூடியதாம். அத்தகைய இயல்புக் குணம் இவனது முந்திய பல பிறவிகளிலும் இவன் செய்த நல்வினை யுடைமையைக் குறிக்கும் பெருந்தயையுடையராய்ப் பிறந்த பெருமக்களையன்றே, நம்முன்னோர் மும்மூர்த்திகளின் பூர்ணுவதாரமெனக் கூறுகின்றனர். ஆகவே அத்தயா குணம் எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளால், இவ்வான்மாக்களிடத்து, இவர்கள் செய்த நல்வினைக்கீடாக அமைக்கப்பட்ட அருட்பிரசாதமாகிய ஓர் கூறுமெனத் தெளிக. இது குறித்தே மற்றோரிடத்திலும்.

“சித்திரமுங் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்.
வைத்ததொரு கல்வி மனப் பழக்கம்—நித்தம்
நடையும் நடைப் பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்”

எனச் சிறப்பித்துள்ளார். இத்தகைய தயா குணம், அமையப் பெருர் மனிதரில் விலங்காவர். இது அமையப் பெற்றவர்களே மனிதரில் மனிதராவர். இத்தயா குணத்தினுல் முழுமனதும் கவரப்பட்டு அதன் மயமாய் மாறினவர்களே மனிதரில் தேவராவர். எடுத்த இப்பிறவியி லேயே இத்தயாகுணம் மூன்று பிறவியை நமக்குக் கொடுத்து நம்மை நிறுத்து மதிப்பிடுவதாகவும் கூறலாம், குதிரை ஏறிச் சவாரி செய்யவும், பசு, பால் கொடுக்கவும், எருது உழுது பயிர் செய்விக்கவும் நாய், அசுங்காக்கவும் இவ்வாறே ஒவ்வோர் மிருகங்களும் ஒவ்வோர் பெரும் பயன்களை நமக்குத் தரும்பொருட்டே சிருஷ்டிக்கப்பட்டிருப்பதாக எண்ணும் மனிதர்கள், அதனை மறந்து அவைகளினிடத்து முறையே அமைந்துள்ள சுறுசுறுப்பினையும், பொறுமையினையும், உழைப்பினையும், நன்றியையும் நமக்குக் கற்பிக்கப் பிறந்திருப்பவைகளாகக் கருதுவதோடு தாங்களும் அவ்வாறே பூததயையைப் பெருக்கி அறம் புரிந்தும் புரியச் செய்தும், உலகிற் கூலியணுய் உழைக்கவே பிறந்திருப்பதாய் எண்ணுவதும் பெருங்கடனும்.

அவ்வாறெண்ணுமல் உலகிற் குழையாமல் நிற்போர்களே மனிதரில் விலங்கெனப் படுவோர். என்னை, விருப்பும், வெறுப்பும், பசியும், தாகமும், கோபமும், சாந்தமும், செய்வினை யச்சமும், இன்பதுன்பமும், ஊடல், கூடலும், மிருகங்கட்கு முளவாதலை, இவைகளை மட்டில் பெற்று தயையென்னும் தெய்வீக குணம், அமையாமக்கள் மனிதரில் விலங்கென மதிக்கப்படுதல் குற்றந்தருமோ? பெறுதற்கரிய மானிடப்பிறவி யெய்தியும் மாந்தரின் முதற்கடமையும், முன்னோர் ஒழுக்கமும், கடவுள் கட்டளையும், தருமமும் நீதியுமெனும் இருபொருள் பயக்கும் அறம் என்னும் ஒரு மொழியினுண்மை யுணர்ந்து அதன்வழி யொழுகி இம்மை

மறுமை ஆகிய இருமையும் பெறுமாறு அறிவுறுத்தலே சால்புடைத்தென்று கருதியன்றோ, நம் எவ்வமில் புகழ் சேர் ஔவையார், உலகோபகாரமாகத் தாமியற்றிய சிறு பிள்ளைகள் ஆதியிற் கற்கவேண்டிய நீதிக் கோவைகளில் முதல் மொழியாக அறம் என்னும் திருமொழியை யமைத்து அதனைச் செய விரும்பு எனவும் காரணம் குறியாமல் கட்டளை இட்டருளியுள்ளார். தருமம், பல் வேற்றுமைகட்கேற்றபடி இருவகையாக, புருட தர்ம மெனவும், ஸ்திரீ தர்மமெனவும் பிரிவுள்ள சில அம்சங்களையுடையதாயினும் ஈண்டு கூறிய அறம் என்னும் பெருமொழி இல்லறம் புரிய இன்றியமையாத பாகஸ்தர்களான, ஆடவர், மகளிர் ஆகிய இரு பாலார்க்கும் ஒரு பாலாய் மதித்துப் பயின்று ஒழுகக்கடவ தொன்றுமென்பதையும் ஈண்டு கூறுதல் பொருத்தமுடைத்தாம்.

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழா துற்றுபவர்" என்னும் முதுரைக் கிணங்க பிறப்பின் விசேடத்தால் தயாகுணம் வாய்க்கப் பெறுனெனினும் அத்தகைய தயாகுணம் மறுமைக்காவது இயல்புக் குணமாய் அமையக்கூடியதாய் "அறம் செய, விரும்பு என்று வலியவாவது, தருமத்தினை விருப்பத்தோடு செய்" எனக் கட்டளை யிடுகிறார்போலும், செய்கைப் பழக்கத்தினுல் விருப்பமும், விருப்பத்தால் ஜன்மமும், ஜன்மத்தால் இவ்விருப்பத்திற்கேற்ற கர்மமும், கர்மத்தால் மோக்ஷமும் கைகூடுதலுண்மை யாதலையும் மேலே காட்டிய அறஞ்செய விரும்பு என்னும் நீதித்தொடர் எடுத்துரைக்கின்றது போலும். காட்டில் வானப்பிரஸ்தராயிருந்த ஓர் தயாகுணம் நிரம்பிய ரிஷி சிரேஷ்டரின் குடும்பத்தினர் தம்முயிர் தரியாதென்பதறிந்தும் வந்த அதிதிக்கு தமக்கென்றிருந்த அன்னத்தை மகிழ்ந்தளித்து பசியாற் களைத்துத் தமதுயிர் துறப்ப அவ்வதிதியுண்ட உச்சிட்ட யிலையிற் புரண்டு ஒரு பக்கம்

பொன் மயமாய் மாறிய ஓர் பூனை தரும புத்திரர் செய்த ராஜசூய யாகத்தில் லக்ஷம் லக்ஷமாய்ப் புசித்த அந்தணர்களின் உச்சிஷ்ட இலைகளில் புரண்டு புரண்டு பார்த்தும் மற்றொரு பாகம் பொன்னாகக் காணாதேங்கிற்றெனும் நமது மஹாபாரத கதையும் இத்தருமத்தின் பெருமையை நன்கு, புலப்படுத்துவதாகும்.

சகோதர கனவான்களே! ஔவையாராலேயே பிரதான வாக்கியமாகப் பொறுக்கியெடுத் தமைக்கப்பட்ட சிறப்பினையுடைய, அறம் என்னும் ஒரு மொழிக்கு சிற்றறிவுடைய யான் உரைவிரித்தலென்பது எவ்வாற்றானும் பொருந்தாதாயினும் "தன் பொருட்டுக் கூறுதல்" என்னும், கொள்கையுடையேனாதலின் அறிவுடையோர் இதனை அங்கீகரித்திடுவாராக.

இங்ஙனம்,

அசலாம்பிகையம்மாள்.

---

## நன்மொழி.

---

### யாக்கை நிலையாமை.

மண்ணொன்று கண்டீரிரு வினைப் பாத்திரந்
திண்ணென் றிருந்தது தீயினைச் சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டு மண்ணாவபோ
லெண்ணின்ற மாந்த ரிறக்கின்ற வாறே—திருமந்திரம்.

---

# ரவீந்த்ரநாத் டாகோரின் சரித்ரம்.

வங்காள நாட்டில் ஜனித்த இம்மஹா கவியை நேரில் பாராதவர் பலர் இருப்பினும், இவ்வுலகத்தில் இவர் பெயரைக் கேட்டறியாதவர் சிலரே—இவருடைய குணத்தையும் கல்வித் திறமையையும் நன்கு மதித்து நமது மாட்சிமை தங்கிய ராஜப் பிரதிநிதி ஹார்டிங் ப்ரபு அவர்கள் இவருக்கு "ஆஸியா கண்டத்து ஆஸ்தான கவி" என்ற பட்டம் அளித்திருக்கிறார். இவர் இந்த மஹத்தான கௌரவத்தை தம்முடையதென்று உரிமை பாராட்டாது தம் நாட்டாருக்கே உரியதென்று தத்தம் செய்த ச்ரேஷ்டர். இரண்டு வருஷங்களுக்கு முன் இவருக்குக் கிடைத்த 8,000, பவுன் மதிப்புள்ள "நோபல் பரிசும்" இவர் மேனாட்டுப் பத்ரிகைகளுக்குப் பன்முறை செய்த அரிய விஷயதானங்களும் இவர் பெயரை மலையில் ஏற்றிய மங்காத மணி விளக்கென நிலை நாட்டுகின்றன. மேனாட்டுக்காக இவர் இதுகாறும் செய்து வந்ததும், இனிச்செய்ய நினைக்கும் பரோபகார ஊழியமும் தமது ஜன்ம தேசத்தாருக்காக செய்த ஊழியத்தோடு இணையாகாது. நம்மவரில் பலர் இவரைக் கவிச்சிங்கமென அறிவர். இவர் உத்தம தேசாபிமானியுமாவர். ஸ்தூலப் பிரபஞ்சத்துக்கு அதீதமான லோகங்களையும் தத்வங்களையும் முக்கியமெனக் கருதுபவர். இக்காரணங்கள் பற்றியே வங்காள நாடெங்கும் இவரைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். இரவும் பகலும் மனோல்லாசந் தரக்கூடிய கீதங்கள் இசைப்பதனால் மட்டுமோ இவருக்கு இம்மஹோன்னத பதவி கிடைத்தது? என்ற வினா நமக்குள் ஜனித்தல் இயல்பு. ஆனால், தமது இனிய பாக்களால் ஜனங்களுடைய மனதையும் பக்தியையும் தம்மிடம்

கவரச் செய்வது இவருக்கு அசாத்யமான கார்யமாகாது, இவர் ஜன்ம சேத்துக்குச் செய்த ஊழியமோ மட்டற்றது.

இந்த ரவீந்த்ர நாத் யார்? பால்யத்தில் தம் பருவச் சிறுவர்களோடு கூடி விளையாடியதும் உலகூட்டும் பல கலைகளைப்பயின்றதுமான இடம் எது? என்ற விஷயங்களை அறிய விரும்புவது நமக்கு ஸஹஜம். குபேரச் செல்வம் படைக்கப் பெற்றவரும் இந்திய தேசத்துக்கப்பாலும் தமது புகழை நாட்டியவருமான மஹர்ஷி தேவேந்த்ரநாத் டாகோரின் புதல்வர். "இவன் தந்தை என்னோற்றான்கொல்" என்று உலகத்தார் வியக்கும்படியாக "அவையத்து முந்தியிருப்பச் செயலை"த் தமது தந்தையிடம் கற்றவர். பண்டைக்காலத்து ரிஷிகளைப்போன்று ஸர்வத்தையும் பரித்யாகஞ் செய்து, "உடம்பினில் உத்தமனைக்கண்ட" தேவேந்த்ரநாத் கல்கத்தாவிலுள்ள தமது இல்லத்திலும் ஹிமாசலத்திலுள்ள தமது ஆச்ரமத்திலும் இடைவிடாது.

"இன்றெனக் கருளியிருள் கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின்றன்மை நினைப்பற நினைந்தே
னீயிலாற் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந்
திருப்பெருந் துறை யுறை சிவனே
யொன்று நீயல்லை யன்றி யொன்றில்லை
யாருன்னை அறிய கிற்பாரே"

என்றவாறு ஆனந்தப்புலம்பல் செய்வார். இம்மஹர்ஷியை இந்தியாவின் ஞானதீபம் மங்காது, இந்தியர்களின் மஹத்தான பாரம்பர்யம் கெடாது இரக்ஷிக்க வந்த பரம

புருஷர் என்பது பொருந்தும். அம்மஹர்ஷியின் கனிஷ்ட குமாரரும் அதிபால்யத்தில் தமது தாயை இழந்தவருமான ரவீந்த்ரநாத் பால்யமுதல் தந்தையின் இணைபிரியாததோழ ராகி, ஆற்றோரங்களிலும், கடற்கரையிலும், மலைச்சரிவுகளி லும் அவர் செய்யும் த்யானக்ரமங்களை தமக்குச் சொல்லா மற் சுட்டிக்காட்டியது போலத் தெரிந்துகொண்டார்.

இவருடைய பிதா அல்லும் பகலும் ஆழ்ந்த த்யானங் களிலே காலங்கழிப்பர்; ஜீவாத்மாவும் பரமாத்மாவும் கூடிக் கலவுதற் கறிகுறியாக நதிகள் ஒன்றில் மற்றொன்றும் ஸங் கமமாவதைப்பார்த்து மகிழ்வர். இமயமலைச் சிகரங்களில் வெள்ளிய மாலைபோல் படிந்திருக்கும் தூய பனிக்கட்டி களைக் கண்டு நெடுநேரம் ஆனந்திப்பர்.

ரவீந்த்ரநாதர், தமது பிதாவின் அநுபவத்தினாலும் ஸ்ருஷ்டிப்பொருள்களை உற்று நோக்குவதனாலும், பல விஷயங்களைத் தாமே யறிந்து கொண்டார்.

ஒரு முறை, தமது சுயபாஷையில் முதல் பாட புஸ்த கத்தைப் படிக்கும்போது, பாடத்தையும் உபாத்தியாயர் சொல்வதையும் கவனியாதிருக்க, உபாத்தியாயர் அவரைக் கண்டித்தார். ஆனால் அவர் கண்ணும் கண்ணீருமாய் அடு த்த அறை போய் பாடப் புஸ்தகத்தில் வரைந்திருந்த புலி யைப்பற்றி சில பாட்டுகள் கட்டினார்.

சிலர் கவிகளாகவே பிறக்கிறார்கள். அவர்கள் கற்கும் முறைகளோ, ஸாதாரண ஜனங்களுடைய முறைகளினின்று வேறுபடும். இயற்கையான பிரபஞ்சமே அவர்கள் படிக் கும் புத்தகம். அப்புத்தகத்தினின்றும் ,வேண்டியமட்டும் கற்று தங்கள் நாட்டகத்துக்கும் நாட்டாருக்கும் பெருமை பயக்கும் முதல்வராய் நிற்கின்றார்கள்.

இவரது பிதாவும் ஸ்ருஷ்டிமாதாவுமே, இவருக்கு ஞானகுருவாக, விளங்கினர். இவர் பிதாவோ, வைதிக சிரேஷ்டர். இவரது கிருஹத்திலோ, தினந்தோறும் உலகத்தில் சிறந்த பல வேத புஸ்தகங்களைப் படிப்பதும் படித்துக் கேட்பதும் அவைகளில் சொல்லியபடி நடத்தலும் ஒவ்வொருவரிடமும் சிறந்து விளங்கின. இவரது மூத்த சகோதரரோ ஒரு தவச்ரேஷ்டர். தன் மேலேறிச் செல்லும் அணிலகளின் உபத்ரவங்களின் உணர்வை மறந்து பரவசம் அடைந்திருப்பர். இதுவே இவர்கள் குடும்பத்தார்களின் மேலான இயல்பைக் காட்டவல்லது. இவரும் தனித்தும், தமது பிதாவோடு சென்றும் ஸ்ருஷ்டி, ஸ்ருஷ்டிகர்த்தா, இவர்களோடு கூடிக்கலக்கும் வழக்கமுடையவர்.

ரவீந்த்ர நாதர் விஷயங்களின் அந்தரங்க ரஹஸ்ய பாவஞானியென மேனாட்டார் அறிவர். இவர் பிரதமத்தில் செய்த அன்பு, பக்தி தயை, முதலிய நற்குணங்களை விளக்கும் கவிகளைப் பாடி நெக்கு நெக்கென உருகாத வங்காளிகள் கிடையவே கிடையாது. இவரியற்றிய கீதாஞ்சலியை ஐரோப்பாவில் அறியாதவர் கிடையாது. பால்யம் முதல், ஜீவாத்மா பரமாத்வாவுடன், தலைவனும் தலைவியும் கூடிக்கலத்தற்போல், கலந்திருப்பதே நித்ய ஆனந்தமென்ற உண்மையை வைஷ்ணவ நூல்களிலிருந்து அறிந்துகொண்டவர். வைஷ்ணவ இலக்கியங்களைப் படியாதவர்களுக்கு, இவருடைய கீதாஞ்சலியில் வர்ணனைகள் புதுமாதிரியாகத் தோன்றும். ஆனால் வைணவ கிரந்தங்களுணர்ந்தவர்கள் கீதாஞ்சலியினின்று பூர்ணமான ஆனந்தமெய்துவார்கள்.

இந்திய கவிதையானது ஆயிரம் இதழ்களோடு கூடிய தாமரைக்கு ஒப்பானது. இந்திய காவ்யங்களில் இகத்தைக் குறித்தவை, பரத்தைக் குறித்தவையென தனித்தனியே காவ்யங்கள் கிடையா—ஏனென்றால், உயர்ந்த பரிபக்குவமுள்ள ஒரிந்துவுக்கு, புருஷனே தெய்வமென்றும், தெய்

வமே புருஷனென்றும் தீர்மானம் உண்டு. இவ்விதமாக, ஈச்வரனுக்கும் ஜீவனுக்கும் இருக்கும் பாரமார்த்திக ஐக்கியத்தை இலகுவாய் விளக்குவதால் நமது ரவீந்திர நாதரின் பாடல்கள் மேனாட்டில் சிறந்து கொண்டாடப்படுகின்றன. ஈச்வரனுடன் தான் நேரில் கலந்த அநுபவத்தைப் பிறருக்குப் பொருள்படுமாறு இவரது பாடல்களில், மிக உருக்கமாய் வெளியிடுகிறார்.

“உன் ஸிம்ஹாஸனத்தினின்று இறங்கி என் குடிசையின் வாயிலுக்கு வந்தாய்.

நான் ஒரு மூலையில் தனியே கீதம்பாடிக் கொண்டிருந்தேன். அது உன் காதுகளில் விழுந்தது போலும், உன்னுடைய மாளிகையிலோ, இன்னிசைப்பனுவலர் அநேகர் உண்டு. எப்போதும் தேவ கானங்கள் இசைக்கப்படுகின்றனவே—அப்படி யிருக்க, என்ன அன்பு! இந்தப்புதிய சிஷனுடையபாட்டைக்கேட்டு உள்ளங்களித்தாய்” என்றும் ஒரு பாடலில் ஆனந்திக்கிறார். ஸூர்யனைக்கண்ட மாத்திரத்தில் தாமரை மலர்ந்து தன் வாசனை முழுவதையு மனமுவந்து சூர்யனுக்கு அர்ப்பணம் செய்கின்றது.

ராகவையர்.

---

## நன்மொழி.

---

பண்டம் பொய்க்கூரை பழகி விழுதலா
லுண்டவப் பெண்டிரு மக்களும் பின்செலார்
கொண்ட விரதமு ஞானமு மல்லது
மண்டியவருடன் வழி நடவாதே.

---

(26-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

நீலா:—அம்மா, அதையேன் கேட்கிறீர்கள்?—மஹாராஜாவுக்குப் பயித்தியம் தான் பிடித்திருக்கிறது.

மீரா:—மஹாராஜாவைப்பற்றியப்படி யொன்றும் பேசாதே. அவருடைய மனதும் புத்தியு மெனக்குத் தெரியாதா? என் காலவித்தியாச மென்னை வருத்துகிறது.—ஐயோ, ஈசா, இந்தப்பழியுமெனக்கு வேண்டுமோ? நானேற்கனவே படும் துயரம் போதாதா? என் பதி யென்னைக் குறித்திப்படியு மெண்ணவேண்டுமோ? ஹரே! கிருஷ்ணு! ஏனிப்படி யென்னை சோதிக்கிருய்? ஐயோ, என்ன இது? எனக்கொன்றும் தெரியவில்லையே. என் பதியாவது, என்மீதிப்படி யபிப்பிராயம் கொள்ளவாவது? நீலா, இதென்னயிப்படிச் செய்தார், மஹாராஜா? ஒருநாளும் யோசிக்காமலொரு காரியம் செய்யமாட்டாரே. இது அவர் தாமே கொண்ட அபிப்பிராயமா, அல்லது யாராவதவருக்குப் போதித்தார்களா?

நீலா—அதெனக்குத் தெரியாதம்மா.

மீரா—(தனக்குள்) எனக்கொன்றும் தோன்றவில்லையே. நானவரை நேரில் பார்க்கட்டுமா? (வெளிப்படையாகி) நீலா மஹாராஜா எங்கே யிருக்கிருரிப்பொழுது? நானவரைக் கண்டு நேரில் பேசினு லொருவேளை யவர் மனதிரங்கும், கெட்ட எண்ணம் மாறுபடும்.

நீலா—அம்மா, அவருக்கிப்போ துங்கள் மீதிருக்கும் கோபத்தை யுத்தேசிக்கு மிடத்து, நீங்களவரை நேரில் காணுமலிருப்பதே நலமென்று தோன்றுகிறது. அப்படிச் செய்வதுங்களுக்குப் பிரதிகூலத்தையே விளைவிக்கும்.

ஒரு க்ஷணங்கூட தாங்களிங்கே தாமதிக்கக்கூடாதென்றுத்தரவு தந்திருக்கிருரம்மா.

மீரா—உனக்கென்ன தெரியும்? நான் போயவரைப் பார்க்கத்தான் போகிறேன். என்னைக் கண்டாலவர் மன திளகி விடுமடி.

நீலா—அம்மா, வேண்டாம்.

மீரா—நீ பேசாமலிரு.

நீலா—அம்மா வேண்டாம். நீங்களங்கே போக முடியாது. சேவகர்களுக்கெல்லா முத்தரவாய் விட்டது.

மீரா— ஐயோ, அப்படியா? நீலா, இதெல்லாவற்றிற்கும் காரணமென்ன? நான் பக்தி செய்த தவருக்குப் பிடிக்காமலிருந்ததா? கிருஷ்ணு! எனக்குன்னிடத்திற் பக்தியைக் கொடுத்த நீ யவருக்கும் பக்தியைக் கொடுக்கலாகாதா? அந்த பக்தியில்லாமையா லல்லவா என்பதிக் கென்மீது வெறுப் புண்டாயிற்று? இன்னுமென்ன கஷ்டங்களுக் கெல்லாமென்னை யுள்ளாக்கப் போகிருய்? இதைவிட அதிக கஷ்டங்கூட ஒரு ஸ்திரீக் கேற்படமுடியுமோ? நீலா, நான் போய் வருகிறேன். வேறெனக்கொருவழியு மில்லை. போகு முன்னென் மனதிலிருப்பதை யெல்லா முன்னிடத்தில் சொல்லிவிட்டுப் போகிறேன். அப்படி வாயைவிட்டுச் சொல்வதா லெனக்குச் சற்று மனவாறுதலாவதுண்டாகும். கேள், நீலா, நான் ரத்னசிங்குக்குப் புத்திரியாய்ப் பிறந்தது மருமையாய் வளர்ந்தது முனக்குத் தெரியுமே. எனக்கு விவாக காலம் வருவது வரையில் துக்கம், கவலையென்ன வென்று தெரியாது. என் மனங்கோண என் தாய் தந்தையர்கள் பார்த்துப் பொறுக்கமாட்டார்கள். அவர்கள் மனங்கோணவும் நான் பார்த்துச் சகிக்கமாட்டேன். என் தகப்பனர் கிருஹத்தில் நானெந்தப் பக்கம் திரும்பினுலுமென் மனதுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய பதார்த்தங்

கள் என் கண்களிற் படுமேயல்லாமல் கொஞ்சமாவதென் மனதுக்குக் கவலையைக் கொடுக்கும்படியான தொன்று மென் கண்ணிற்ருென்ருது மேலுமென் மாதா பிதாக்களிரு வரும் பரமபக்தர்கள். என் தாய் எப்போதென்னிடம் பேசி ஞலும் பக்தி விஷயமாகத் தானிருக்கும். எனக்குச் சொல் லும்படியான கதைகளெல்லாம் கிருஷ்ண பகவானுடைய கதைகள் தான். என்னுடன் விளையாடுகிற விளையாட்டுக ளெல்லாம் கிருஷ்ணபரமானவைகள் தான. இப்படிப்பட்ட வர்களிடத்தில் கொஞ்சகாலம் ஸகவாஸமிருந்தாலே பரம பக்தர்களாய் விடுவார்களே. அப்படியிருக்க, பிறந்தது முத லவர்களோடிருந்து அவர்களுடைய புத்திமதிகளைக் கேட்டு வந்த எனக்குக் கிருஷ்ண பகவானிடத்தில் பக்தியுண்டான தாச்சரியமா? சிறு குழந்தையாயிருப்பது முதலே யெனக் கந்த கிருஷ்ணமூர்த்தியினிடத்தில் பக்தியுண்டாகிவிட்டது. நான் செய்யும்படியான காரியங்கள் பேசும்படியான வார்த் தைகளெல்லாம் கிருஷ்ண பரமாக இருப்பதிலெனக்கோரா னந்தம். மேலுமெனக்கென் தாய் சங்கீதத்தில் பயிற்சி யையு முண்டாக்கினள். அதிலாசையு மெனக்குண்டா யிற்று. என் சங்கீதத்தை விருத்திசெய்து அதை பகவா னுக்கர்ப்பணம் பண்ணியவரைக் குறித்து பக்தி செய்வதி லேயே அதை யுபயோகித்து வருகிறேன். வேறொரு விதத் துக்குமென் சங்கீதத்தை யுபயோகிப்பது கிடையாது. நான் தினந்தோறுமெதைச் செய்யத்தவறினலும் பகவா னைக் குறித்து பஜனை செய்வதில் மட்டும் தவறுகிறதில்லை. முதன்முதலில் எனக்குமென் தாய் தந்தையர்களுக்கும் மனவருத்தமென் விவாக விஷயமான பேச்சுக்களாலுண் டாயிற்று. என் வாழ்நாள் முழுவதையும் பகவானுக்கர்ப்

பணம் செய்து இந்த பவசாகரத்திலிருந்து துன்பப்படா மல் பகவானைக் குறித்து பக்தி செய்துகொண்டிருக்கவேண் டுமென்றெனக் கெண்ணம். என்னுடைய மாதா பிதாக் களுக்கோ என்னை விவாகம் செய்து கொடுக்கவேண்டுமென் கிற அபிப்பிராயம். முதலில் நான் பிடிவாதமாயிருந்த போதிலும் பிறகவர்களிதை நினைந்து நினைந்துருகிக் கண் ணீர் விடுவதைப் பார்த்துச் சகிக்கமாட்டாமலவர்களுடைய தீர்மானத்துக் கிசைந்து பக்தியோடு கூடினவராகவும் எனது பக்திக் கிடையூறு செய்யாமலிருப் பவராயுமுள்ள ஒரு புமானுக்கு வாழ்க்கைப்பட நான் சம்மதித்ததின் பேரி லவர்களென்னை யிந்த மஹாராஜாவுக்கு மணம் செய்து கொடுத்தார்கள். அவர்களைக் குற்றம் சொல்லலாமா? பக்தி செய்வதைக் கண்டு சகிக்காதவர்களுண்டென்ற வர்களெப் படி நினைத்திருக்கக்கூடும்? நீலா, நீதான் யோசித்துப் பா ரேன். பகவத் பக்தி செய்வதைத் தடுப்பவர்களுமுண்டோ?

நான் விவாகமாவதற்கு முந்தி பதிவேண்டாமென்று சொல்லிக் கொண்டிருந்தபோதிலும் விவாகமான பிறகு நா னவரிடத்தில் வைத்த அன்பிற் களவுண்டா? இப்போதவ ரென்னை யிவ்வரண்மனையினின்றும் வெளியேகக் கட்டளை யிட்டிருக்கிறாரே, அதனாலெனக்குண்டாயிருக்கிற வருத்த மெவ்வளவு தெரியுமா வுனக்கு? நான் கிருஷ்ண பக்தி செ ய்துகொண்டிருந்தாலு மவருக்குச் செய்யவேண்டிய சுச்ரு ஷைகளிலேதாவது குறைவுண்டா? அவர் மனம் கோணக் கூடாதென்று எவ்வள வன்புடனு மாதரவுடனு மவருக்கு நான் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்து வந்தேன். அவருக்குத்தா னதுதெரியாதா? என் மீதுதா னவருக்குப்

பிரியம் கொஞ்சமாயிருந்ததா? நானிதை யெல்லாம் சொல்லிப் பிரயோஜனமென்ன? வீணாய்க் காலதாமஸமாகிறது. என் காலவித்தியாசம், நானநுபவிக்க வேண்டிய வேளை. யார் வினை யாரை விட்டது? நீலா, நான் போய்வருகிறேன். எல்லாரிடத்திலும் நான் நிரம்பவும் கேட்டுக்கொண்டதாகச் சொல். அவர்களிடத்தில் நேரில் விடைபெற்றுக் கொள்ள எனக்குச் சாவகாசமுமில்லை. அப்படிச் செய்ய எனக்கும் மனம் சகியாது. அதற்காக அவர்களிடத்தில் நான் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதாகச் சொல். சுந்தரியிடத்தில் நான் நூறு தடவை கேட்டுக்கொண்டதாக மறக்காமற் சொல். நான் புறப்படுகிறேன். (சுற்றிப் பார்த்து) நானெதை யென்னுடனெடுத்துச் செல்வது? எனக்கினி யென்ன வேண்டும்? (கிளிக்கூட்டைப் பார்த்து) வெகு நாட்களாக என்னுடன் பழகி வந்திருக்கிற இந்தக் கிளியை மட்டும் கொண்டுபோகிறேன். அது கூவும்படியான கிருஷ்ண நாமமெனக் கெப்போதும் ஸமாதானத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும். நீலா, நான் போய் வருகிறேன். (போகிறாள்)

நீலா:—(விம்மியழுது) ஐயோ, இனி நாங்கள் தாயிழந்த குழந்தையெனத் தவிக்கவேண்டியதுதான். நாங்களெந்தப் பக்கம் திரும்பினாலும் மீராபாயம்மாளின் ஞாபகந்தானே யெங்களுக்கு வந்துகொண்டிருக்கும். என்ன செய்வோம், ஈசா?

(திரை விழுகிறது.)

(காட்சி முடிகிறது.)

-18



## அங்கம் 2. களம் 5.

---

**காலம்**—மத்தியானம். இடம்--குப்பாஜி ராணாவின ரண்மனை. நாடகபாத்திரர்—கும்பாஜி.

---

**கும்.**—(தனக்குள்) நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறதென்பது சரியாகத்தானிருக்கிறது. நானிந்த மீராவை—ஐயோ, அவள் பெயரைச் சொல்லக்கூட எனக்கு மனம் வரவில்லையே—அந்தப் பாபியை எனதரண்மனையினின்றும் விலக்கினதவளுடைய நடத்தைக்குச் சரியான தண்டனைதானென்று ஜனங்களெல்லோரும் மதிப்பார்களென்று நானெண்ணியிருக்க அவர்களென்னையப்படிச் செய்ததற்காக தூஷிக்கிறார்களாமே. எல்லோருக்கும் புத்தியெங்கே போயிற்று? அவளுடைய நடத்தை நன்றாய் வெளியானபிறகுகூட அவளைப்புகழுகிறார்களே. இதென்ன ஆச்சரியம்? இவளிடத்தில் ஜனங்களுடைய மனதைக் கவரும்படியான சக்தி என்ன இருக்கிறதோ தெரியவில்லையே. முன்னேயாவது காலையொருவேளைமட்டு மாலயத்துக்குப் போய்க்கொண்டிருந்தாள். இப்போது காலை மாலை யிருவேளையும் போகிறாளாம். முன்பு செய்ததைவிட அதிகநேரம் பஜனை செய்கிறாளாம். கொஞ்சம்கூட என்னிடத்திலவளுக்கு மரியாதையில்லை. பதிவ்ரதையாயிருந்தாலல்லவோ பதிக்குப் பயமும் மரியாதையுமிருக்கும்.

(சுந்தரி வருகிறாள்)

சுந்தரி, வா என்ன விசேஷம்?

**சுந்.**—அதிக விசேஷமொன்றுமில்லை. நமதந்தப்புரத்திலிருக்கும் சில சேடிகளும சேவகர்களு மின்றைக்கு ராஜிநாமா கொடுத்திருக்கிறார்கள்.

**கும்.**—அதனாலென்ன? வேறு சேவகர்கள் சேடியர்களகப்படமாட்டார்களா?

சுந்.—அவர்கள் போகிறதிருக்கட்டும். அப்படியவர்கள் செய்வதற்குக் காரணம் தெரியுமா உங்களுக்கு?

கும்.—என்ன?

சுந்.—மீராபாயிருந்த அரண்மனையி லூழியம் செய்த பிறகு அவளில்லாத விடத்திலுழைக்கமாட்டார்களாம்.

கும்.—என்ன! இது வாஸ்தவம்தானா, சுந்தரீ?

சுந்.—ஆம், நாதா.

கும்.—அவள் தொலைந்தும் சுகம் கிடையாதா எனக்கு? அவளுடைய குற்றத்தை யிவர்களறியவில்லையா? நடந்த சமாசாரமிவர்களுக்குத் தெரியாதோ?

சுந்.—தெரியாமலென்ன? எல்லாம் தெரியும். தெரிந்து தானிப்படிச் செய்கிறார்கள்.

கும்.—தெரிந்த பிறகு கூட இவளை வெறுக்கவில்லையா?

சுந்.—இல்லையே!

கும்.—அவளுடைய உள்ளாள்கள் போலிருக்கிறது. இதென்ன கஷ்டமடி எனக்கு வந்திருக்கிறது? ஒரு பக்கத்தில நமது மந்திரி நான் மீரா விஷயத்தில் செய்த காரியம் சரியல்லவென்று சொல்லிக்கொண்டிருக்கிறார். மற்றொரு பக்கத்திலூரிலுள்ள ஜனங்களென்னை நிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். நான் யாருக்குத்தான் நல்லவனானேன். நாளுக்கு நாளிந்தப் பாபியைப் பற்றின கவலை எனக்கு அதிகரித்துக்கொண்டேயிருக்கிறதே.

சுந்.—அவள்தானிவ்வரண்மனையை விட்டுச் சென்றுவிட்டாளே. இனியவளைக்குறித்துக் கவலைப்படுவானேன்?

கும்.—எல்லாவிடத்திலும் நான் மீராவுக்கு விதித்த தண்டனையை நிந்தித்துக்கொண்டிருக்க எனக்கெப்படி கவலையில்லாமலிருக்கும்? அதுவுமிந்த மந்திரியின் உபத்திரவம் நிரம்பவுமதிகமாயிருக்கிறது. என்னைக்காணும்போதெல்லாம் நான் செய்ததைக் குறித்து இகழ்ந்து பேசிக்கொண்டேயிருக்கிறார்.

சுந்.—தாங்கள் செய்ததைப்பற்றி இகழ்ந்து பேசுவதாவது? மந்திரியாயிருந்தாற்றுனென்ன? தாங்கள் மஹாராஜாவல்லவா?

கும்.—அவர் சில சமயங்களில் நான் ராஜுவென்பதையே மறந்து பேசுவதுபோற் ரேன்றுகிறது. நாளுக்குநாள் அவருக்கென்மீதிருக்கும் மரியாதை குறைந்துகொண்டு வருகிறதென்றே நினைக்கிறேன்.

சுந்.—ஒரு மந்திரி யிப்படி யிருக்கலாமோ?

கும்.—இதற்கெல்லாம் காரணமந்த மீராவல்லவா?—ஏன், அவளுயிருடனிருக்குமளவும் நான் சுகமடையப்போகிறதில்லை.

சுந்.—நாதா, அவளைப்பற்றியேனிவ்வளவு கடிந்துபேசுகிறீர்கள்? அவளுயிருடனிருக்கலாகாதா? அவளைத்தானிவ்வரண்மனையை விட்டு விலக்கியாய்விட்டதே. அவளுயிருடனிருந்தாலென்ன? எப்படி யவளுங்களை ஹிம்ஸிக்கிருள்?

கும்.—சுந்தரீ, இவளிந்நகரத்துக்குள்ளிருந்தாலும் வெளியிலிருந்தாலு மிவளுயிருடனிருக்கும் வரையில் ஜனங்களெல்லோரு மென்னை தூஷித்துக்கொண்டு தானிருப்பார்கள். மந்திரியுமென்னை நிந்தித்துக்கொண்டுதானிருப்பார். இந்த ஹிம்ஸையை யென்னுல் பொறுக்கவேமுடியாது.

சுந்.—நாதா, நீங்கள் சொல்லுவதெல்லாமுண்மைதான். ஆயினும் ஜனங்களுடைய குற்றங்களைப் பொறுத்து அவர்களை ரக்ஷிக்கவேண்டிய தர்ம மரசனுடையதல்லவா? தங்களுடைய ராஜ்யத்தில் குற்றங்குறையுள்ள எவ்வளவோ பிரஜைகளுயிருடனில்லையா? இந்த மீராவையவர்களிலொருத்தியாகத் தாங்கள் கருதக்கூடாதா? அவள் செய்த குற்றம் பெரிது தானென்பதை நான் மறுக்கவில்லை. அதற்கெவ்வித தண்டனை விதித்தாலும் தகும். ஆனாலுமென்னுடன் சகோதரிபோல் பழகி வந்து அவளுயிரிழப்பதென்றாலென் மனம் பொறுக்குமா?

(இன்னும் வரும்.)

ஆர். ஸ்ரீநிவாச ஐயர் M. A.

81

## பரோபகாரம்

(22-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

பரோபகாரஞ் செய்யும் காரியத்தில் நமக்கெதிர்ப்படும் முக்கியமான தடைகள் நமது கர்வமும் செருக்குமே. இக் குறைகளுள்ளோர் பேருபகாரம் செய்தல் முடியாது. தன்னைப்பற்றி நினைத்துப் பிறரைப்பற்றி நினைக்குந் தன்மை பிரஹ்மக்ஞான வாசனையுள்ளோர்க்கு ஓர் 'அவமானம். நமது கௌரவம், அதிகாரம் இவற்றைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கு மளவில் உபகாரஞ் செய்யும் தருணம் தவறிவிடலாம். நாம் உயிரோடிருக்கும் ஒவ்வோர் நொடிப்பொழுதும் நமக்கோர் சோதனையும் உதவிபுரியத் தருணமுமாம். நாம் புகும் எத்தொழிலிலும் நமது சக்தி, பொறுமை, ஊக்கம், நற்குணம், தன்னடக்கம், அன்பு முதலியவற்றையும், நமது அந்தரங்க கொள்கைகளையும் நோக்கங்களையுமே நாம் கொள்ளவேண்டியவர்கள்.

அறிவு, அன்பு என்ற இருகண்கள் திறந்திருப்போர் மாத்திரம் அவற்றையறிந்து, ஏற்றபடி நடந்துகொள்வார். ஒவ்வோர் நொடிப்பொழுதும் நமது குறைகளை நிவர்த்தித்து மற்றோர்க்கும் யுக்தமான வுதவி புரியும்படி நமக்களிக்கப் பட்டிருக்கின்றது போலும்.

பரோபகாரஞ் செய்யும் விஷயத்தில் நாம் பிறரை நிபந்தனைகட் குட்படுத்தாதிருப்பது உத்தமம். "அம்மனிதன் துஷ்டன், அவன் மற்றோர்களைப் போலில்லை." அல்லது "இவன் இவ்விதஞ் செய்தால் நானும் அவ்விதஞ் செய்வேன்" என, நாம் சொல்வது சரியாகாது. அன்பிலா மனிதர்கட்கும் ஏன் நாம் அன்பு காட்டக்கூடாது? எக்குணத் தோனாயினும் எவ்வருணத்தோனாயினும், எம்மனிதனாயினும் அவன்கணுள்ள ஈசுவர சைதன்யத்தை யறிந்து, அவருக்கேற்ற வுதவியை நாம் புரிவோமாக!

ஆனால் பேரின்பத்திலும் ஆத்ம லாபத்தையே கருதும் சிலர் பின்வருமாறு கேட்கலாம்:—"இருவினை (அதாவது நற்கர்மம் தீக்கர்மம் என்பவை) யகற்றினாலல்லாது நமக்கு எவ்வாறு மோக்ஷம் கிடைக்கும்? நற்கர்மஞ் செய்வதுங்கூட திரும்பவும் ஜனனத்துக்குக் காரணமாகின்றதே. பிறப்பு இறப்பு இவையொழிப்பதற்கு நற்கர்மம் செய்தல், பரோபகாரம் புரிதல் முதலியன பயன்படமாட்டா. அவை ஆத்மாவைப் பந்தப்படுத்தும்."

இத்தகைய தவறான கொள்கை அநேகர் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் இது பெருமாயம், தன்னிச்சையற்று லோகோபகாரத்தின் போருட்டு, அக்காரியத்தின் பலனை விரும்பாமல் ஒருவன் தோழில் புரிந்தால், கர்மம் ஒருபோதும் அவனைப் பந்திக்காது. இதுவே நிஷ்காம கர்மம் என்பது. இதைப் பெரும்பான்மையான ஜனங்கள் மறந்துவிடுகிறார்கள்.

𑌯𑌜𑍍𑌞𑌾𑌰𑍍𑌥𑌾𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌣𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌲𑍋𑌕𑍋𑌽𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮𑌬𑌨𑍍𑌧𑌨𑌃
𑌤𑌦𑌰𑍍𑌥𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌮𑍁𑌕𑍍𑌤𑌸𑌙𑍍𑌗𑌃 𑌸𑌮𑌾𑌚𑌰 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌸𑌕𑍍𑌤𑌃 𑌸𑌤𑌤𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌸𑌮𑌾𑌚𑌰 ।
𑌅𑌸𑌕𑍍𑌤𑍋 𑌹𑍍𑌯𑌾𑌚𑌰𑌨𑍍𑌕𑌰𑍍𑌮 𑌪𑌰𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌪𑍂𑌰𑍁𑌷𑌃 ॥

𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌵 𑌹𑌿 𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌜𑌨𑌕𑌾𑌦𑌯𑌃 ।
𑌲𑍋𑌕𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌮𑍇𑌵𑌾𑌪𑌿 𑌸𑌂𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ॥

கீதை 3-வது அத். 9, 19, 20 சுலோகம்.

(1) யக்ஞத்திற்கென்று காரியங்கள் செய்தாலொழிய மற்றப்படி உலகம் கர்மத்தினால் பந்தப்படும். ஆனதால் ஹே! குந்திதேவியின் குமாரனே, பற்றற்றவனாய் நின்று கர்மத்தைச் செய். (தொழில்புரி, காரியம் செய்)

(2) பற்று இல்லாமல் தர்மம் (கடமை) என நினைத்து இடைவிடாது கர்மத்தைச் செய்துகொண்டு வா. ஏனெ

னில், ஆசை வைக்காமல் ஒருவன் காரியஞ் செய்தால், பரம் பொருளை நிச்சயமாய் அவனடைவான்.

(3) கர்மத்தால் தான் ஜனகாதிகள் பூரணம் பெற்றார்கள். ஆனதால், லோகத்தின் யோகக்ஷேமத்தைக்கருதுபவனாய்க்கொண்டு, நீ கர்மஞ்செய்து கொண்டுவரவேண்டும். (அதாவது, தொழில் புரியவேண்டும். நற்காரியங்களைச் செய்து வரவேண்டும்.)

எனப் பகவான் கீதையில் கூறுகின்றனர். இவ்விதமே இறைவனும் மஹரிஷிகளும் ஜகத்பரிபாகத்தை நடாத்தி வருகின்றார்கள். ஆனதால் நாமும் அவ்விதமே செய்யப் பழகிக் கொள்ளவேண்டும். சிறு காரியத்தில் உத்தரவாதம் செய்ய நம்மால் இயலாவிடில், பெருங் காரியத்தில் ஊக்கத்துடனுழைத்து, எவ்விதம் நாம் உத்தரவாதம் செய்யப் போகின்றோம்? "நான் சுகம் பெறுவதேக் காலம்? எனது துயர் நீங்குவதேக் காலம்" என கணக்கண்டு கொண்டிருப்பதைவிட மற்றோர்கள் துயரத்தை நீக்குவது எவ்வளவு மேன்மை! மற்றோர் பாதம் வெயிலிற்படா வண்ணம் தானிருந்த நிழலான ஆசனத்தைப் பிறர்க்கு அளித்து தான் வெயிலில் நிற்பவன் அன்பில் மிக்கானன்றோ? தன்னுயிர் துறந்து மன்னுயிர் காத்தல் என்ற குணம் சாமானிய ஜனங்களுக்கு சாத்தியமல்ல. ஆயினும் அவ்விதந்தான் பரம கருணா மூர்த்தியாகிய ராஜா ரந்திதேவர் செய்தார். அவ்விதந்தான் ததீசி மஹரிஷியும் தமது முதுகெலும்பை தேவேந்திரனுக் களித்து, அவரது ராஜ்ஜியம், ஸ்தானம் வைபவ முதலியவற்றை மீட்கவுதவினார்.

அத்தகைய பெருங்காரியங்களைச் செய்ய நமக்கு ஆற்றல் இல்லை. ஆயினும், நாமும் சொற்பமாவது செய்யலாம். "மௌனவாக்கு" என்னும் அத்தியத்புத ஞானநூல் கூறுவதைக் கேளுங்கள்:—"சூரியனாக நீ இருக்க இயலாவிடினும்

ஒரு தணிந்த கிரஹமாக இருத்தற் பாலதன்றோ? மேலும் சிஷனே, என்றும் பரிசுத்தமான ஹிமாசலத்தின் சிகரத்தின்மேல் சூரியனைப்போல ஜ்வலிக்கும் திறமையுனக் கில்லாவிடினும்; உனக்குத்தகுதியான தாழ்மையுள்ள வேறொரு நெறி இல்லையா? அதை நாடு. இருட்டில் நடக்கின்றயாத்திரைக்காரருக்கு அந்தி நக்ஷத்திரம் வழிகாட்டுமாறுபோல், நீயும் உன்னால் இயன்றவரை உன்னண்டை உள்ளவர்க்கு வழி காட்டுவாய்."

செவ்வனே நாம் சிந்தித்துப் பார்க்குமளவில், பல விதங்களில் மற்றவர்கட்கு நாம் உபகாரமாயிருக்கலாம்.

அன்பும் அறிவும் இருப்பின் பிறர்க்குழைக்க பல்வழிகள் மனதினெதிரே வந்து நிற்கும். பொருளிருந்தால்தான் அவ்விதம் நாம் உதவிபுரியலாமெனநினைப்பது தவறான எண்ணம். பொருளிருத்தல்மேல்தான். பொருளுள்ளோர்க்கு அன்பு அல்லது அருளுங்கூட விருப்பின், உலகம் களிப்புறும். அத்தகையார் எத்துறைகளிலும் மிக்கப் பயன்படுவார். அவர்களைப்பற்றி பிரஸ்தாபம் இங்கு நாம் செய்ய வேண்டுவதில்லை. நான் காட்ட விரும்புவதெல்லாம் என்னவெனின், சொற்பபொருளும் ஆனால் உபகாரம் புரியப் பேராவலும் உள்ளவர்கள் எவ்விதம் மற்றோர்க்குதவி புரியலாமென்பதே. மனம், வாக்கு, காயம் என்ற இம்மூவழிகளிலும் அவர்கள் எவ்வுயிர்க்கு முழைக்கலாம். அதைப்பற்றியேதான் நான் இங்கு சில விஷயங்கள் கூறத் துணிந்துளேன். அவை சிறுவர்கட்காவது பயன்படக் கூடியன.

நமது பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இவற்றைப்பற்றி ஏதாவது ஊக்கத்துடன் உபதேசித்து வந்தால், அவ்விதமே பிள்ளைகளும் சந்தோஷமாய்ச் செய்து வருவார்கள். பிரதிதினமும் ஒவ்வோர் குழந்தையும் ஓர் நற்காரியத்தையாவது செய்து வரும்படி பெரியோர்கள் புத்திமதி கூறினால், ஓராண்டின் இறுதியில்

365-நற்காரியங்கள் செய்த சந்தோஷம் நமது மக்கட்குண்டாகுமல்லவா? அதிகமாய்ப் பரோபகாரஞ்செய்து வரும் பிள்ளைகட்கு, வருஷந்தோறும் மற்றபாடங்களில் தேர்ச்சிக்கென நாம் பரிசளிப்பதுபோல் பரோபகாரத்தில் தேர்ச்சிக்கென அழகிய பரிசுகள் அளித்துவந்தால், குழந்தைகளிடம் எவ்வளவு நற்குணங்கள் அமையப்பெறும்! மற்றோர்க்கு நேர்வழிகளிற் சந்தோஷ முண்டுபண்ணுவதிலேயே தன்னுடைய சந்தோஷத்தை நாடுகின்ற வாலிபன் என்ன பாக்கியம் பெறுகின்றான்! இச்சுலபமான காரியத்தை வழக்கமாய்ப் பிள்ளைகள் செய்துவரும்படி உபாத்தியாயர்களும் பெற்றோர்களும் தங்கள் குழந்தைகட்கு உபதேசிக்கவேண்டும்

இப்போது சரீர முயற்சியால் நாம் பிறர்க்கு எவ்வாறு உபகாரஞ் செய்யலாமென யோசிப்போம். நான் கூறும் விஷயங்கள் மற்றவர்கட்குத் தோன்றாதனவல்ல. அவை மிகவும் சாமானியமானவைகளே. ஆயினும் அவற்றை நாம் கவனிக்கின்றோமில்லை. உதாரணமாய் ஈசனுக்குத் தொண்டுபுரிய, பிள்ளைகள் சௌகரியப்பட்ட காலங்களில் பத்திரம், புஷ்பம் முதலியன கொணர்ந்து வரலாம். வழியில் ஜனங்களுக்கு இடையூறாய்க் கிடக்கும் கல், முள், கண்ணாடித்துண்டு முதலியன இருந்தபோதிலும், அவற்றைப் பொறுக்கி யெறிவதும் பரோபகாரமே. அல்லது ரஸ்தாவில் வண்டி அல்லது மாடு இவற்றிற்கெதிரே அறியாமல் வரும் குழந்தைகள், குருடர், பலஹீனர் முதலியவர்களை யெச்சரிக்கை செய்து வேறு விதங்களிலும் உதவிபுரியலாம். தேவையான காலங்களில் மற்றோர் தலைச்சுமையை இறக்கவோ தூக்கிவிடவோ பால்யர்களெல்லோர்க்கும் சாத்தியம்.

ரயில் பிரயாணஞ் செய்யுங்கால், வண்டியில் வந்து ஏறும் ஜனங்களிடம் சீறிப்பேசாமலும், தடை செய்யாமலும், மரியாதையுடனும், களிப்புடனும் சம்பாஷித்து

மிகுதியானவிடம் தம்மிட்மிருந்தால் அவர்கட்கும் கூடிய வரை பயன்படும்படியாய்ச் செய்தல் எல்லோர்க்கும் எளிதே. நமது ஸ்வாதீனத்தை அக்காலங்களில் கொண்டாடுவது மதியீனம். தவிரவும் அநேக சமயங்களில், ஸ்திரீகளும், விருத்தர்களும், குழந்தைகளும் கூட்டத்தில் நின்றுகொண்டு துன்பமுறுங்கால், வாலிபர்களும் திடகாத்திரமுள்ளவர்களும் தங்கள் சௌகரியத்தையே நாடுகின்றார்கள். இதுவும் பெருங்குறையே. ரயில்பிரயாணத்தில் ஜனங்கள் ஓரிடம் இறங்கி யேறும்பொழுது சௌகரியப்பட்ட காலத்தில் தேவையானவர்கட்கு நாம் சொற்ப உதவியாவது புரியலாமன்றோ?

நாம் அருந்தும் தின்பண்டங்களிலிருந்து வாயற்ற ஜீவராசிகளும், வாயுள்ள தீனஜனங்களும் புசிக்குமாறு ஓர் சிறு கூறுகிலும் நாம் அளிக்கலாமன்றோ? நாம் தின்ற பழத்தின் மேல் தோலையாவது ஆடுமாடுகள் உண்ணலாம் பக்ஷிகள், நாய், எறும்பு இவை களிப்புறுமாறு, அவைகட்கு ஏற்றதீனி ஏதாவது நாம் சுலபமாய் அளிக்கக்கூடும்.

வித்தையில்லாத ஏழை ஜனங்களுக்கு சொற்ப வித்தையுள்ளவர்களும் அநேக விதங்களிலுதவலாம். குளங்களிலும், கிணற்றடியிலும் எளியோர்க்கும் விருத்தர்கட்கும் வேண்டியவுதவி நாம் புரியலாம். கலியாணவீடுகளில் நமது சிறுவர்கள் சுலபமாய்ச் செய்யக்கூடிய சிறு கைங்கரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன; வியாதிஸ்தரான ஜனங்கள் தங்கள் துன்பத்தையுணராமல் பொழுது போக்கும்படி நல்ல விஷயங்களைப் பற்றி நாம் அவர்களிடம் சம்பாஷித்தும் அல்லது பரலோக விஷயமாயுள்ள நூல்களை அவர்களுக்குப் படித்தும் அஜ்ஜனங்களுடைய மனதைப் பதப்படுத்தலாம்.

ஜனசமூகத்தின் நன்மையை நாடியே உழைக்கும் சங்கங்களில் அதற்கேற்ற திறமையுள்ளோர்கள் சேர்ந்து அக்காரியம் சீராய் நடந்தேறும் வழிகளைத் தேடுபவர்களுடன் கூடவிருந்து நாமும் உழைக்கலாம். "அல்பமான தொண்டு இது" "அது நற்காரியமாயினும் அதை நாம் செய்தால், நம்மை மற்றோர் மதியார். நமது கௌரவம் கெட்டுப் போகலாம்" என நினைத்துச் சும்மா இருத்தல் தவறு. இவ்விஷயங்களில் நாணமிருத்தல் கூடாது. பொருள் சம்பாதிக்கும் காரியங்களில் நாம் விசேஷமான நாணம் காட்டுகின்றோமில்லை. ஜனோபகாரமான காரியத்தைச் செய்ய நாம் வெட்கப்பட்டால் ஈசனும் நமக்கு அருள்புரியக் கூச்சங் கொள்வாரன்றோ?

உதவிபுரிய தருணம் வாய்த்ததேயென நாம் ஈசனை வாழ்த்தல் வேண்டும். உபகாரம் செய்வதில் கர்வங்கொள்ளக் காரணமொன்றுமில்லை. இப்பாக்கியம் கிடைத்ததை நினைத்து, நம்மிடம் உபகாரம் பெறுவோர்க்கு நாம் மனதில் வந்தனமளிக்கவேண்டும். ஆனதால், எங்கெங்கு அவ்வித சமயம் நேருகின்றதோ அதைத் தவறவிடாமல் நாம் உபயோகப் படுத்துவோமாக! ஒவ்வோரிடத்திலும் நாம் சௌக்கியமாய் இருந்து அநுபவிக்க வேண்டுமென நினைப்பதைப் பார்க்கிலும் நம்முடைய முயற்சியாலும், உழைப்பாலும் பிறர் சந்தோஷமுறும் வழிகளை நாம் நாடுவோம்

சரீரத்தால் மாத்திரமன்று, நாம் வாக்கினாலும் மற்றவர்கட்குபகாரம் செய்தல் சாத்தியம். நல்லவர்களை நல்லவர்களென்று கூறி பஹிரங்கமாய் நாம் பறையடிப்பதுகூட நம்மால் முடியாதா? குணமும் திறமையுமுள்ள நாதியற்ற ஜனங்களுக்கு நமக்கு வியாபக மிருக்குமிடத்தில் ஓர்

வேலை அல்லது உபகாரம் செய்து கொடுப்பது பெருங் காரியமல்ல. துஷ்டர்களுடைய குணங்களைப்பற்றி சற்றும் நினையாமலும், பிறருடன் வம்பளக்காமலும் அவர்கள் நற்குணங்களையே மனதில் சிந்தித்து அவற்றை விருத்தி செய்வது யாவர்க்குமெளிது. ஹிதமான வார்த்தைகளால் கெட்டவர்களையும் நல்வழிப்படுத்த முடியும். ஜனோபகார மான காரியங்களில் உழைத்தற்பொருட்டு பொருளில் மிகுந்தாரிடஞ் சென்று கூடியவரை மிருது வசனத்தால் அவர்களையும் அவ்வேலையில் உதவிபுரியும்படி தூண்டலாம்.

"அடிக்கடி நாம் இவ்விஷயங்களில் பிரவிர்த்தித்தால் நமது கௌரவம் கெடும்'' என்ற பயம் அநேகர்க்கிருக்கலாம். சிலர் விஷயத்தில் அது நியாயமே. ஆயினும், ஜனோபகாரத்தில் பெரும் ஊக்கங்கொண்டு அதுவே தொண்டு என நினைத்து உழைப்பவர்களுக்கு இப்பயம் சற்றேனும் வேண்டாம், அக்காரியமெல்லாம் இறைவன் காரியமாதலால், அவற்றில் நமக்கு குறையேற்படும் என்ற பயம் சற்றும் நம்மிடமிருத்தல்கூடாது. சௌகரியப்பட்ட காலங்களில் ஏழைப்பிள்ளைகட்கு வித்தை கற்பிப்பது, உபயோகமான விஷயங்களைப்பற்றி பத்திரிகைகளுக்கு வியாசங்கள் எழுதுவது பிரசங்கங்கள் செய்வது, எல்லோர்க்கும் பயன்படக் கூடிய பல சங்கங்கள் ஏற்படுத்துவது, இவையெல்லாம் அறிஞர்கள் எளிதில் செய்யக்கூடிய விஷயங்களே.

மனத்தால் உபகாரம் செய்வது யாவர்க்குமெளிது. ஆயினும், பூரண அறிவுள்ளோரே இதைப் பூரணமாய் நிறைவேற்றமுடியும். சாமானிய ஜனங்கள் இவ்விஷயத்தில் சற்று செய்யலாம். ஆனால், எதற்குங் காரணமாகிய அன்பு அவர்களிடம் அதிகமாய் இருத்தல் வேண்டும்.

(இன்னும் வரும்)

ஆர். பஞ்சாபகேச ஐயர்.

# சர்வதேள் விஷ சஞ்சீவி.

## கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!

### விஷந்தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!

குணமில்லாவிட்டால்

## ரூபாய் 100 இனும் கொடுக்கப்படும்!!!



நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனேகரும் கண்டு விசனமுற நேரிடுவதைப்பற்றி, நாம் அதிககஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்தமருந்து கண்டுபிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பியடாக்டர்களாலும், தமிழ்வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப் பெற்றது. எமது மேற்கண்ட லக்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷசஞ்சீவியை தேள் கொட்டின இடத்தில் உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச்செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய் பூரான், செய்யான், பாம்பு, நண்டு, துறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துகள் தீண்டினபோதிலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குண மடையலாம்.

மேற்சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்துவிடப்படும்.

இந்த லக்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள். இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைபட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | ரூ அ பை |
|---|---|
| விலை பாக்கெட் 1-க்கு ரூ | 0—8—0 |
| டசன் 1-கு ரூ | 5—0—0 |

விலாசம்:—வி. ஏ. எஸ். பாணி,

நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

# அவசியமான அபூர்வ ஔஷதங்கள்.

## ஸ்ரீமதனாநந்தம்.

தாதுபுஷ்டி காரியான இந்த சாஸ்திரோத்தம லேகியமானது, ஜனனேந்திரிய சம்பந்தமாய் உண்டாகிற, இந்திரிய நீர்த்தல் ஸ்வப்னஸ்கலிதம், துரிதஸ்கலிதம், மேஹம், மதுமேஹம், முதலியவைகளையும் சுவாஸ சம்பந்தமாய் உண்டாகிற, க்ஷயம், சுவாஸகாசம, முதலியவைகளையும் [illegible]ங்கங்கள் சம்பந்தமாய் உண்டாகிற. அஜீரணம், அக்னிமாந்தம், கிரகணி அதிசாரம், முதலிய பலவிதமான நோய்களையும் துலைத்து, வீரிய விருத்தி, ஞாபக சக்தி, இந்திரியக்கட்டு, ஜீர்ணசக்தி, தேகபலம், மனோத்ஸாகம், சுகாந்தி, பார்வைக்கு கூர்மையை, மிருதுவானதொனி முதலியவைகளை கொடுப்பதுமே. ஸ்திரீகளுடைய ருதுக சம்பந்தமான வியாதிகளை விலக்கி அனேகம் பிள்ளைகளின் மாதாவாக்கிவைப்பதுமான இச்சிறந்த ஔஷதம் பெட்டி 1-க்கு ரு. 1—8—0.

## வேதனாஹாரம்

நடுக்குகுவாதம், முடக்குவாதம், தலைநோய், இடுப்புவலி, கை கால்பிடிப்பு ஜலதோஷம், கை கால் குளிர்ச்சி, இருமல், தேள்கொட்டு விஷம், பல்நோய், முதலானவைகளுக்கு இத்தைலத்தில் சிறிதெடுத்து நோயுள்ளவிடத்தில் நன்றாய் தேய்த்து கம்பளித்துணியால் அவ்விடத்தை சுற்றி வைக்கவுடனே சுகமாகும். விலை புட்டி 1-க்கு அணா 8.

## தத்ரு நாசகம்.

தேகத்தில் இடுக்கான இடங்களில் உண்டாய் அதிவேகமாய் தேகம் முழுதும் பரவுவதும் ஓயாது நமைச்சலைக் கொடுப்பதுமாகிய மேசப்படை, தடிப்படை, தேமல், முதலிய எல்லாவித சர்ம வியாதியையும் அடியோடு துலைக்கக்கூடிய திவ்விய ஔஷதம் புட்டி 1-க்கு அணா 4.

## கரப்பான் பூச்சி நாசனி.

வீடுகளில் உபத்திரவகரமாயுள்ளதும் விசேஷமாய் பண்டசேகர அறை சமயல் அறை முதலிய இடங்களில் ஆகாரசேகரப்பொருள் முதலியவைகளை நாசவிதப்படுத்துகிற அருவருப்பான கெட்ட கரப்பன் பூச்சிகள் (Cockroachs) இருக்குமிடத்தில் இப்பொடியை போடுவதால் இவைகள் அடியோடு துலைந்துபோம். கெட்ட 1-க்கு அணா 4.

## சொறிக்களிம்பு.

விசேஷமாய் கை விரல்களுக்கிடையில் கண்டு தேசம் முழுவதிலும் பரவுவதும் ஸதா நமைச்சலெடுத்து ஆளை மெத்த கஷ்ட ஸ்திதியில் வைத்துக் கொண்டிருப்பதுமாகிய சொறிசிரங்கு, கடி, முதலிய சர்மநோய்களை உடன் பறக்கடிப்பதில் சிறந்தது விலை புட்டி 1-க்கு அணா 5

## சுகந்த கேசரம்.

இது அதி மனோஹரமான பரிமளத்தோடு கூடின சந்தனக் கூட்டு அம்பர், கஸ்தூரி, குங்குமப்பூ முதலிய விலையேறின சிரேஷ்டமான சுகந்த வர்க்கங்களைச் சேர்த்து தயாரித்துள்ளது. இந்த சூர்ணத்தில் கொஞ்சமெடுத்து. சாதா சந்தனத்துடனாவது அல்லது, பனிநீரிலோ. அல்லது சுத்த சலத்திலோ குழைத்து தேசத்தில் பூசிக்கொள்வதால், வியர்வை நாற்றம் முதலியவைகளை நீக்கி மனோஹரமான பரிமளத்தையும், தேகத்திற்குக் குளிர்ச்சியையும் கொடுக்கும். உற்சவ காலங்களிலும், கலியாண காலங்களிலும், எவ்விதம் அவசியமானதோ அதுபோலவே இக்கோடை காலத்திற்கும் மிகவும் அவசியமானது. புட்டி 1-க்கு அணா 8.

**P. A. Iyer**,
*Pallavoor, Palghat, Malabar.*

ப. அ. அய்யர்,
பல்லவூர், பாலக்காடு, மலபார்.